www.padippakam.com

# பொதுவுடைமை

## மார்க்சிய - லெனினிய கருத்தியல் ஏடு

**7**

### உள்ளே...

- **தன்னுடன் போராடி புறநிலையை மாற்று**
  –தலையங்கம்
- **சாதிய முறையை ஒழிப்பதற்கான அணுகுமுறை**
  –சோலையப்பன்
- **ஒரு மின்னல் வீச்சு!**
  –புதிய ஜீவா
- **விவசாயப் பிரச்சினையில் மாநில அமைப்புக் கமிட்டியின் அணுகுமுறை குறித்து சில விவாத குறிப்புகள்**
  –மணிவண்ணன்
- **மக்கள் யுத்தம் போல்சுவிக் தலைமையுடன் ஒரு கருத்துப் போராட்டம்**
  –தாஸ்
- **தோழர் வினோத் மிஸ்ரா நினைவாக!**
  –எல்ஜியெஸ்
- **ஒரு மொழிக் கொள்கையை உயர்த்தி பிடிப்போம்! தமிழை பயிற்று மொழியாக்கவும் ஆட்சி மொழியாக்கவும் அணிதிரள்வோம்!**
  –இல.கோ

இதழ் - 7 டிச. '98–பிப். '99 விலை ரூ.5.00

படிப்பகம்

www.padippakam.com

பொதுவுடைமை
மார்க்சிய - லெனினிய கருத்தியல் ஏடு

ஆசிரியர் குழு:

சோலையப்பன்
மணிவண்ணன்
எல்ஜியெஸ்

வெளியீடு:

மார்க்சிய
படிப்பு வட்டம்

மக்கள்
விடுதலை முன்னணி

தொடர்புக்கு:

இல.கோவிந்தசாமி
மே/பா
தி. சிலப்பதிகாரம்
எண் 1, முதல்தெரு
சோமசுந்தர பாரதி நகர்
வடபழனி
சென்னை- 600 026
தொ.பே.:481 4850

# தன்னுடன் போராடி புறநிலையை மாற்று

எட்கர் ஸ்நோ என்ற அமெரிக்க பத்திரிகையாளர் ஒரு முறை மாவோவை நோக்கி மாவோவின் வாழ்க்கையிலேயே சிக்கலானதென எதைக் கருதுகிறார் என்று கேட்டார். மாவோ, ''உட்கட்சி போராட்டம்'' என்று பதில் அளித்தார்.

ஆனால் இந்தியாவில் உள்ள ஒரு பொதுவுடமையாளருக்கு உட்கட்சி போராட்டம் அல்ல; தன் குழுவுக்குள்ளும், குழுக்களுக்கிடையிலும் உள்ள போராட்டம்தான் சிக்கலானதாக அமைந்துள்ளது. இந்திய பொதுவுடமை இயக்கம் குழுக்களாக உள்ளதே இதற்கு அடிப்படைக் காரணம்.

இந்திய பொதுவுடமை இயக்கம் இன்னும் வலது - 'தீவிர' இடது என்ற இரு எதிர்எதிர் நோய்களில் சிக்குண்டு இருப்பதால் சரியான போக்கை உருவாக்குவதற்கான போராட்டம் மிக முக்கியத்துவமானதாகி இருக்கிறது. புதியதொரு சமூக அமைப்பையும் புதியதொரு மனிதனையும் படைக்க விரும்புவோர் தங்களை அறிவார்ந்தமுறையிலும், பண்பியல் வகையிலும் மேம்படுத்திக் கொள்ள வேண்டாமா?

தன்னுடன் போராடி, புறநிலையை மாற்று (Fight Self; Change Object) என்று மாவோ கூறினார். தொழிலாளி வர்க்கம் முதலில் தன்னை மாற்றி உலகை மாற்ற வேண்டும் என்று மார்க்சியம் அறிவுறுத்துகிறது.

இந்திய பொதுவுடைமை இயக்கம் இரு தீவிர நோய்களான திரிபுவாதம் மற்றும் துணிச்சல்வாதத்திலிருந்து மீள தனது அறிதலின் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். பண்பின் பாங்கை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். மார்க்சிய - லெனினிய அனைத்தும் தழுவிய உண்மைகளை இந்திய புரட்சியின் நடைமுறையுடன் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இதற்கான வளர்ச்சியைப் பெற கருத்தியல் போராட்டம் தோழமையுடன் நடத்தப் பெற வேண்டும். சர்வதேசிய நிலைபாடுகள், விஞ்ஞான பூர்வமான திட்டம், உண்மையான ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையிலான ஒன்றுபட்ட கட்சி போன்றவற்றை அது பெற வேண்டும்.

இந்த திசை நோக்கி குறைந்தபட்ச அளவிலாவது மக்கள் யுத்தம் - செங்கொடி (ரெட் ஃபிளாக்) - விடுதலை போன்ற குழுக்களிடையில் ஒரு விவாதம் தொடங்கியுள்ளது. அதை வரவேற்கிறோம்.

- ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com

விவசாயிகளின் வர்க்கப் போராட்டத்திற்கான திசைவழி குறித்த அணுகுமுறை

# சாதிய முறையை ஒழிப்பதற்கான அணுகுமுறை

—சோலையப்பன்

(5— வது இதழ் தொடர்ச்சி...)

இந்திய சமூக அமைப்பில் சாதிய முறையானது பல நூறு ஆண்டுகாலமாக நீடித்து நிலவி வருகிறது. ஒடுக்கும் சாதிகளுக்கும் ஒடுக்கப்படும் சாதிகளுக்கும் இடையில் அவ்வப்போது மோதல்கள் ஏற்பட்டுள்ள போதிலும் அடிப்படையான சாதியக் கட்டமைப்பில் மாற்றங்கள் நிகழவில்லை. சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நகரங்களைக் காட்டிலும் கிராமப்புற சமூக அமைப்பில் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் ஆதிக்கத்தின் கீழ் சாதியம் மிகவும் கொடுமையானதாக உள்ளது. இந்திய சமூக அமைப்பு வர்க்கங்களாக மட்டும் அல்லாமல் சாதிய ரீதியாகவும் பிளவுபட்டுள்ளது. இந்திய சமூக அமைப்பில் வர்க்கங்களுக்கு இடையிலான மோதலும், சாதிகளுக்கு இடையிலான மோதலும் நிகழ்ந்து வருகின்றது. இத்தகைய போராட்டங்களை எவ்வாறு மதிப்பிடுவது?

## சாதி ஒடுக்கு முறையை எதிர்ப்பதும் வர்க்கப் போராட்டமே

வர்க்கப் போராட்டம் குறித்து மார்க்சின் கருத்து : ''இது நாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் (அதாவது ஏட்டிலேறிய வரலாறு அனைத்தும்) வர்க்கப் போராட்டங்களது வரலாறே ஆகும். சுதந்திரமுடையானும் அடிமையும், பட்ரீசிய உயர் குலச் சீமானும் பிலெபியப் பாமரக் குடியோனும், நிலப்பிரபுவும் பண்ணையடிமையும், கைவினைச் சங்க ஆண்டானும் கைவினைப் பணியாளனும், சுருங்கக் கூறுமிடத்து ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவர்க்கொருவர் தீராப் பகை கொண்டோராய் ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமாகவும், இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதின் புரட்சிகரப் புத்தமைப்பிலோ, அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலோதான் எப்போதும் முடிவுறலாயிற்று''. (கம்யூனிஸ்டு கட்சி அறிக்கை).

ஒடுக்குவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்கும் இடையிலான போராட்டம் மூலம் சமுதாயம் மாறிவந்துள்ளது. இந்திய வரலாறானது ஆளும் வர்க்கங்களை எதிர்த்த அடிமைப்பட்ட வர்க்கங்களின் போராட்டத்துடன் கூடவே உயர் சாதியினரின் ஆதிக்கத்தை எதிர்த்து கீழ்ப்பட்ட, அடிமைப்பட்ட சாதிகளின் போராட்டத்தையும் உள்ளடக்கி உள்ளது. இந்திய சமூகம் வர்க்கங்களாக மட்டுமல்லாமல், சாதிய ரீதியாகவும் பிளவுபட்டுள்ளது. விவசாயத்துறையிலும் தொழில்துறையிலும் பெரும் பகுதி உற்பத்தி சாதனங்களை கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நிலப்பிரபுக்கள், தரகுப் பெரும் முதலாளிகள் மற்றும் உயர் வர்க்கங்கள் உயர் சாதியினராக உள்ளனர். சாதியப் படிநிலையானது உபரி உறிஞ்சும் வடிவமாக சுரண்டும் வர்க்கத்துக்குப் பயன்பட்டு வருகிறது. கிராமப்புற உழைக்கும் மக்களை பிளவுபடுத்தி மோத விடுவதாகவும் சாதியம் உள்ளது. தீண்டாமைக்கு எதிராகவும் சாதியமைப்பை ஒழிக்கவும் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் ஜனநாயகத்துக்கான போராட்டமாகும். ஜனநாயகத்துக்கான போராட்டம் வர்க்கப் போராட்டமாகும். ஒடுக்கும் தேசிய இனத்தை எதிர்த்து ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் போராட்டமும், ஒடுக்கும் நாட்டை எதிர்த்து ஒடுக்கப்படும் நாட்டின் போராட்டமும் வர்க்கப் போராட்ட தகுதியைப் பெறுவது போல, ஒடுக்கும் ஆதிக்க சாதிகளை எதிர்த்து ஒடுக்கப்படும் கீழ்நிலை சாதிகள், அடிமைப்பட்ட சாதிகளின் போராட்டமும் வர்க்கப் போராட்டமாகும். சமூகத்தின் இதர



படிப்பகம்

www.padippakam.com

பிரிவினரின் ஜனநாயக உரிமைக்கான போராட்டம் போல் கருதத்தக்கதாகும்.

## சாதியமைப்பை ஒழிப்பதற்கான வர்க்கப் போராட்டம்

சாதி ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடுவது உழைக்கும் மக்களின் ஐக்கியத்தை சீர்குலைத்து வர்க்கப் போராட்டம் நடத்துவதற்கு தடங்கல் உண்டாகும் என்ற கருத்து கம்யூனிச இயக்கங்களிடையே நீண்டகாலம் நிலவியிருந்தது. பாட்டாளி வர்க்கத்தை ஒன்று திரட்டி வர்க்கப் போராட்டம் நடத்தி அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினாலே சாதிய முறை முடிவுக்கு வந்துவிடும் என்று கருதியது. இக்கருத்து வலது, இடது கம்யூனிஸ்டு கட்சிகளிடையே நிலவியது. பொருளாதாரப் போராட்டங்களில் தொடங்கி பொருளாதார வாதத்தில் முடிவடைவதையே வர்க்கப் போராட்டம் என இவைகள் கருதின. பாராளுமன்ற எல்லைக்குள்ளாக வர்க்க சமரச அரசியலை நடத்தி வருகின்றன. தற்போது சில பகுதிகளில் தீண்டாமைக்கு எதிராக இயக்கங்களை நடத்துகின்றனர்.

மார்க்சிய— லெனினிய இயக்கங்கள் துவக்கக் காலத்தில் வர்க்கப் போராட்டம் என்ற பெயரில் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் முழு அளவிலான வர்க்கப் போராட்டத்தை நடத்துவதற்குத் தவறினர். ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் தத்துவ, அரசியல் தலைமையளித்து ஒழுங்கமைத்து நாடு தழுவிய அளவில் வர்க்கப் போராட்டத்தை முன் கொண்டு செல்வதில் தவறினர். ஆளும் வர்க்கத்திற்கும் அவர்களைப் பாதுகாக்கும் அரசுக்கும் எதிராகப் போராடுவதே வர்க்கப் போராட்டமாகும் என்ற மார்க்சிய புரிதலை அறியாமல் இருந்தனர். தங்களின் அணுகு முறையில் மாறுதல்கள் இருந்த போதிலும், வர்க்கப்போராட்டம் குறித்த சரியான தத்துவப் புரிதலை வந்தடைய வேண்டியுள்ளது. பொருளாதாரப் போராட்டம், அரசியல் போராட்டம், தத்துவப் போராட்டம் ஆகியவற்றுடன் கூடவே சாதி ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடும் போதே வர்க்கப் போராட்டத்துக்கு அர்த்தம் இருக்கும். மார்க்சிய— லெனினிய முறையிலான வர்க்கப் போராட்டத்தை கம்யூனிஸ்டுகள் நடத்தத் தவறியதால் தொழிலாளர், விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து தனிமைப்பட்டு இருக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலைக்குப் பதிலாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தலைமை தாங்குவதற்கு புதிய புதிய தலைமைகளும், அமைப்புகளும் உருவாகி வருகின்றன. சாதிய ஒழிப்புப் போராட்டம் முதலில் நடத்த வேண்டும் எனவும் பின்னர் தான் வர்க்கப் போராட்டம் எனவும் கூறுகின்றனர். அதாவது சாதிய முறையை ஒழிப்பதற்கான போராட்டத்தை ஒருகட்டமாக நடத்த வேண்டும் என்கின்றனர். தீண்டாமையும், சாதி இழிவும்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதன்மையான பிரச்சனையாக உள்ளன. இவற்றிற்குத் தீர்வு காண்பதே உடனடியான பிரச்சனையாகும் எனக் கூறுகின்றனர். சமூகத்தில் ஐந்தில் ஒரு பகுதி மக்களை தாழ்த்தப்பட்டவர்களாக்கி, தீண்டாமைக்கு உள்ளாக்கி சமஉரிமை மறுக்கப்பட்டு, தனி சேரிகளில் அடைத்து வைத்திருக்கும் நிலைமையானது மனிதர்கள் அனைவரும் சமம் என்கிற ஜனநாயகக் கோட்பாட்டை மறுத்து விடுகிறது என்பது உண்மை தான். ஆயினும் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் முழுவதும் சாதி ஒழிப்பை ஒரு கட்டமாக நடத்த வேண்டும் என்பதில் மட்டும் அடங்கி இருக்கவில்லை.

விவசாயத்துறையில் பெரும் பகுதி உற்பத்திச் சாதனங்களை கட்டுப்பாட்டில் கொண்டுள்ள நிலப்பிரபுக்கள் மற்றும் உயர் வர்க்கங்கள் சுரண்டுகிறவர்களாகவும் உயர் சாதியினராக இருப்பதும், அரை நிலவுடைமை உறவுகள் நீடிப்பதாலும் சாதியப் படிநிலை கட்டிக்காக்கப்பட்டு வருகிறது. இம்முறை உபரி உறிஞ்சும் வடிவமாக சுரண்டும் வர்க்கத்துக்குப் பயன்பட்டு வருகிறது. கிராமப்புற உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தி மோத விடுவதாகவும் சாதியம் உள்ளது. இதனால் தனி உடைமையும் சுரண்டலும் நீடித்திருக்க வகை செய்கிறது. அரை நிலப்பிரபுத்துவத்தையும், தனிவுடைமையையும், சுரண்டலையும் எதிர்த்துப் பல முனைகளில் போராட வேண்டும்.





படிப்பகம்

www.padippakam.com

தாழ்த்தப்பட்ட மக்கள் தொழிலாளர்களாகவும் உள்ளனர். இந்தியாவில் தொழிலாளர்களுக்கு உள்ள பிரச்சனைகள் எல்லாம் அவர்களையும் பாதிக்கின்றது. சிறுபிரிவினர் ஒழுங்கமைந்த துறைகளிலும் (organised Sector) அதிகமானவர்கள் ஒழுங்கமைக்கப்படாத துறைகளிலும் (Unorganised Sector) வேலை செய்கின்றனர். இன்றைய தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலகமயமாக்கல் கொள்கையாலும், பன்னாட்டுக் கம்பெனிகள், பெரும் முதலாளிகளின் தாக்குதல்களாலும் வேலையிழப்பு, வேலை உத்தரவாதமின்மை, புதிய வேலை வாய்ப்புக்கள் பெறமுடியாமை, குறைந்த கூலி போன்ற துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்நிலைமைகளை எதிர்த்துப் போராடும் தொழிலாளர்களோடு இணைந்து தாழ்த்தப்பட்ட மக்களின் தொழிலாளர்களும் போராட வேண்டிய அவசியம் உள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் விவசாயிகளாகவும் உள்ளனர். பெரும்பகுதியினர் உடைமையற்ற விவசாயத் தொழிலாளர்களாகவும் (பாட்டாளிகள்) ஏழை விவசாயிகளாகவும் (அரைப் பாட்டாளிகள்) உள்ளனர். எனவே கிராமப்புறத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிய அனைத்துப் பிரச்சனைகளும், விவசாயிகளுக்கு உரிய அனைத்துப் பிரச்சனைகளும் இவர்களையும் பாதிக்கின்றது. இந்திய அரசின் விவசாயக் கொள்கை, விலைக் கொள்கை, கடன் கொள்கை, நிலச்சீர்திருத்தம் போன்றவற்றிற்கு எதிராகவும், இந்திய விவசாயத்துறையை பன்னாட்டுக் கம்பெனிகள் கொள்ளையடிக்க வகை செய்யும் கொள்கைகளை எதிர்த்தும், கொள்ளை வட்டிக் கொடுமையை எதிர்த்தும் விவசாயிகளின் போராட்டத்தோடு தாழ்த்தப்பட்ட மக்களும் ஒன்று சேர்ந்து போராட வேண்டிய அவசியமும் உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரிய தீண்டாமை, சாதி ஒடுக்குமுறை என்ற சமூக ஒடுக்குமுறையும் உள்ளது. கூலியடிமைத்தனம், சாதியடிமைத்தனம் என்ற இருவித அடிமைத்தளையில் தாழ்த்தப்பட்ட மக்கள் சிக்குண்டு கிடக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் சாதி ஒழிப்புதான் முதன்மை பிறகுதான் வர்க்கப்போராட்டம் என்று கூறுவதும், வர்க்கப் போராட்டம் தானாகவே சாதியை ஒழித்துவிடும் எனக் கூறி சாதி ஒழிப்பிற்கான நடைமுறையை கைவிடுவதும் தவறானது ஆகும். இது, ஒரு மனிதனுக்கு அதிகம் உதவுவது வலது காலா, அல்லது இடது காலா என விவாதிப்பது போலாகும். அரசியல் ஒடுக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை, சமுதாய ஒடுக்குமுறை (இதுவும் அரசியல் வகையே) இம் மூன்றையும் ஒருங்கிணைந்த முறையில் நடத்துவதே சரியான மார்க்சிய—லெனினிய முறையிலான வர்க்கப் போராட்டமாகும்.

## சாதி ஒழிப்புப் போராட்டத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் தலைமை என்பது சரியா?

சாதியடிமைத்தனமும், சாதி ஒடுக்குமுறையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமே உரியதாக இருப்பதால் சாதியமுறை ஒழிவதற்கான போராட்டத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்கள்தான் தலைமை தாங்குவார்கள் என்கிற கருத்து தாழ்த்தப்பட்ட இயக்கங்களிடையே இயக்கத் தலைவர்களிடையே நிலவுகின்றது. இன்னும் சொல்லப் போனால் சாதியம் ஒழிவதற்கான போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே பங்கேற்பார்கள் என்றும் கூறுகிறார்கள். சாதி இழிவு நீங்கி சமத்துவம் பெறுவதற்காக நடத்தப்படும் போராட்டம் ஜனநாயக இயக்கமாகும். நாட்டில் தற்போது தொழிலாளிவர்க்கம், விவசாயிகள், இன்னும் பல மக்கள் பிரிவினரும் பல்வேறு வடிவங்களில் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு உள்ளனர். சமூகத்தை ஜனநாயகப்படுத்தும் போராட்டத்தில் இவர்களும் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பான்மையான போரிடும் மக்களின் இயக்கத்தில் இருந்து தனிமைப்பட்டு விலகி நின்று தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான போராட்டத்தை நடத்துவதென்பது தலித் மக்களின் இயக்கத்தை சிறுபான்மையோரின் இயக்கமாக மாற்றுவதாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினராக உள்ளனர். சிறுபான்மையான இயக்கம் முழு



படிப்பகம்

www.padippakam.com

விடுதலையை நோக்கி முன்னேற முடியாது. சில சீர்திருத்தங்களை வேண்டுமானால் கொண்டு வரலாம். தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் தங்களின் பொது அழிவிலே முடிந்து போகாமல் இருக்க வேண்டுமானால், புரட்சிகரமான போராட்டங்களாக மாற வேண்டுமென்றால் ஜனநாயகத்துக்காகப் போரிடும் பெரும்பான்மையான மக்களின் இயக்கத்தோடு ஒன்றுபட்டு இருக்கும்போதே சாத்தியமாகும். மேலும் உழைக்கும் மக்கள் மற்றும் ஜனநாயக சக்திகளால் தனிமைப் படுத்தப்படாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். சமுதாய வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், "முந்தைய வரலாற்று இயக்கங்கள் எல்லாம் சிறுபான்மையோரது இயக்கங்களே அல்லது சிறுபான்மையோரது நலனுக்கான இயக்கங்களே ஆகும். ஆனால் பாட்டாளி வர்க்க இயக்கம் மிகப் பெரும்பான்மையோரது நலனுக்காக மிகப் பெரும்பான்மையினர் தன்னுணர்வோடு நடத்தும் சுயேச்சையான இயக்கமாகும். தற்கால சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்காகிய பாட்டாளி வர்க்கமானது அங்கீகாரம் பெற்ற சமுதாயத்தில் மேலமைந்த அத்தனை அடுக்குகளையும் காற்றிலே பறந்தெழச் செய்யாமல் அசையவோ நிமிர்ந்து நிற்கவோ முடியாது." (கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை).

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தலைமை தாங்கி வரும் தலைவர்கள் அம்பேத்கர் ஆட்சியை அமைப்போம் என்றும், தலித் மக்களின் ஆட்சியை அமைப்போம் என்றும் கூறுகிறார்கள். அப்படி ஒரு ஆட்சி அமைந்தால் அது எத்தகைய அரசியல் பொருளாதாரம் கொண்டதாக இருக்கும்? தலித் மக்களுக்கென்று தனிப்பட்ட அரசியல், பொருளாதாரம், தத்துவம் ஏதும் உண்டா? தனிஉடைமையை அடிப்படையாகக்கொண்ட சுரண்டல் சமுதாயத்தைக் காக்கும் அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட ஒரு ஆட்சியாக அது இருக்குமானால் தலித் மக்களின் விடுதலைக்கு அது உதவுமா? குடியரசுத் தலைவரே தாழ்த்தப்பட்டவராக இருந்தும் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடைபெறும் அடக்குமுறைகள் குறைந்த பாடில்லை. மாநில முதல்வராகவோ, பிரதமராகவோ வந்தால் கூட தாழ்த்தப்பட்ட மக்களின் தகுதி உயர்ந்துவிடப் போவதில்லை. மார்க்சிய-லெனினிய தத்துவத்தை வழிகாட்டியாகவும், சோசலிச குறிக்கோள்களையும், உடனடியாக மக்கள் ஜனநாயக சமூகத்தை படைக்கவுமான பாதையில் செல்ல வேண்டும். சோசலிசத்தை மறுக்கவோ, வெறுக்கவோ செய்தால் தவிர்க்க முடியாமல் குட்டி முதலாளித்துவ இயக்கமாக மாறி முதலாளித்துவ அரசியல், பொருளாதார புதைசேற்றில் தன்னை புதைத்துக் கொள்வதாகும். இன்றைய சமுதாயத்தின் அடிமட்டத்து அடுக்கினராகிய தொழிலாளர்களும், விவசாயிகளும் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களும் சமுதாயத்தின் மேல்மட்டத்து அடுக்கினராகிய உயர் சாதியினர், நிலப்பிரபுக்கள், பெரும் தரகு முதலாளிகள், இவர்களால் பாதுகாக்கப்படும் ஏகாதிபத்தியங்கள் ஆகியவற்றின் எதேச்சாதிகார, அரசியல், பொருளாதார கோட்டைகளை காற்றிலே பறந்தெழச் செய்யாமல் அசையவோ, நிமிர்ந்து நிற்கவோ முடியாது. இது மக்கள் ஜனநாயகப் புரட்சியால் மட்டுமே முடியும்.

## மார்க்சிய-லெனினிய முறையில் சாதியச் சிக்கலுக்கு தீர்வு காணல்

இந்தியா இன்று புதிய ஜனநாயகப் புரட்சியின் கட்டத்தில் உள்ளது. இந்திய அரசு பெரும் தரகு முதலாளித்துவ வர்க்கம், பெரும் நிலப்பிரபுக்கள் மற்றும் உயர் சாதியினராலும் (பார்ப்பனர், வேளாளர், செட்டியார், பனியா, மார்வாடி) பிரதிநிதித்துவ அரசாக உள்ளது. சிறுபான்மையினரான மேல்நிலை வர்க்கங்களின் சுரண்டல், ஆதிக்க நலன்களை கட்டிக்காக்கும் அரசாக உள்ளது. பெரும்பான்மையான உழைக்கும் மக்களை அடக்குகிற அரசாக உள்ளது. ஏகாதிபத்தியம் மற்றும் பன்னாட்டுக் கம்பெனிகளின் நலன் காக்கும் அரசாக உள்ளது. உழைக்கும் மக்கள், தேசிய இனங்கள், சிறுபான்மை மதத்தினர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிவாசிகள் ஆகியோர் அரைகுறையான அல்லது ஜனநாயக உரிமை இல்லாதவர்களாக உள்ளனர். பெரும்பான்மையான மக்கள் வாழ்வதற்கு தகுதியற்றதாக தற்போதைய இந்திய சமுதாயம் உள்ளதால், இந்நிலைமையை மாற்றியமைக்க புதிய ஜனநாயகப் புரட்சி தேவைப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

கிராமப்புற சமூகத்தில் அரை நிலப்பிரபுத்துவ உறவுகள் நீடித்துக் கொண்டிருக்கின்றன. நிலப்பிரபுத்துவத்தின் சாம்பலிலிருந்து முதலாளித்துவம் உண்டாகவில்லை. இருக்கின்ற முதலாளித்துவமோ பிற்போக்கானதாக உள்ளது. பிற்போக்கு முதலாளித்துவமும், பிற்போக்கு நிலப்பிரபுத்துவமும் ஜனநாயகமற்ற சூழலை கட்டிக் காத்து வருகின்றன. நிலப்பிரபு மற்றும் பணக்கார விவசாயிகள் உயர் சாதியினராக (வேளாளர், ரெட்டியார், செட்டியார், நாயுடு) உள்ளனர். விவசாயிகளை கடுமையாக சுரண்டுபவர்களாக உள்ளனர். விவசாயத் தொழிலாளர்கள் (பாட்டாளிகள்) மற்றும் ஏழைவிவசாயிகள் (அரைப் பாட்டாளிகள்) பெரும்பாலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினராக உள்ளனர். இவர்களை மிகக் கேவலமான வாழ்க்கையில் இருத்தி உள்ளனர். நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும் உயர்சாதியினராக உள்ளதால் சாதி சமூக அமைபைக் கட்டிக் காத்து வருதில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சாதியப் படிநிலையானது உபரி உறிஞ்சும் வடிவமாக சுரண்டும் வர்க்கத்துக்குப் பயன்படுகிறது. விவசாயப் புரட்சியின் (Agrarian Revolution) மூலம் அரைநிலப்பிரபுத்துவ உறவுகளை தகர்த்து சமூகத்தை ஜனநாயகப்படுத்தல் இன்றைய அவசரத் தேவையாக உள்ளது. விவசாயப் புரட்சியின் அங்கமாகவும், அதை முன்தள்ளிச் செல்வதாகவும் சாதி ஒழிப்புப் போராட்டம் அமைதல் வேண்டும். நிலப்பிரபுத்துவ வர்க்கங்களையும், பெரும் தரகு முதலாளி வர்க்கத்தையும், ஏகாதிபத்திய கொள்ளைக்காரர்களையும் இலக்கில் வைக்காத, அவர்களை எதிர்த்துப் போராடாத சாதி ஒழிப்பு இயக்கம் முழுமையானதாக இருக்காது. மார்க்சிய—லெனினிய தத்துவமே இதற்கு வழிகாட்டியாக அமையும். மா. லெ தத்துவம் மட்டுமே மக்களை அனைத்து விதமான சுரண்டல், ஒடுக்கு முறையில் இருந்து விடுதலை செய்யக் கூடிய தத்துவமாகும். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியின் அங்கமான விவசாயப் புரட்சியுடன் இணைந்ததாக சாதி ஒழிப்பு இயக்கம் நடைபெற வேண்டும். பின்னர் இது சோசலிச சமூகத்தை நோக்கி முன்னேறும் போதே உழைக்கும் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் தாழ்ந்தப்பட்ட மக்களின் வாழ்க்கையில் மேம்பாடு உண்டாகும்.

## வர்க்க முரண்பாடுகளையும் சாதிய முரண்பாடுகளையும் தீர்த்தல்

இந்தியச் சமூகம் வர்க்கங்களாகவும் சாதிகளாகவும் பிரிந்துள்ளது. கிராமப்புறங்களில் வர்க்கப் போராட்டத்தை ஒழுங்கமைக்க ஒடுக்கும் வர்க்கம் ஒடுக்கப்படும் வர்க்கம் எனவும், ஒடுக்கும் சாதிகள் ஒடுக்கப்படும் சாதிகள் எனவும் பாகுபடுத்த வேண்டும். ஒடுக்கும் வர்க்கத்தையும், ஒடுக்கும் சாதிகளையும் எதிர்த்து முறியடிப்பதாக வர்க்கப் போராட்ட திசை அமைய வேண்டும். முரண்பாடுகளை இரண்டு வகைப்படுத்தலாம். அவை மக்களுக்கும் எதிரிக்கும் இடையிலான முரண்பாடு, மக்களுக்கு இடையிலான முரண்பாடு ஆகும். மக்களுக்கு இடையிலான முரண்பாடு பகைத்தன்மையற்றவையாகும். இதை நட்பு ரீதியில் தீர்க்கவேண்டும். மக்களுக்கும் எதிரிக்கும் உள்ள முரண்பாடு பகைத்தன்மை கொண்டவை. இதை புரட்சியின் மூலம் தீர்க்க வேண்டும். கிராமப்புறத்தில் புரட்சியின் இலக்காகவும் விவசாயிகளின் எதிரிகளாகவும் நிலப்பிரபு வர்க்கம், பல்வேறு அரசியல் மற்றும் சாதிகளைச் சேர்ந்த புதிய பணக்கார கிரிமினல் கும்பல், பன்னாட்டுக் கம்பெனிகள், பண்ணை முதலாளிகள் ஆகியோர் உள்ளனர். இக்கும்பலை தூக்கியெறிய உழைக்கும் மக்களை அணிதிரட்ட வேண்டியுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், மத்திய தர விவசாயிகளை ஓரணியில் திரட்டவேண்டும் இதற்கு சாதியம் தடையாக உள்ளது. இவ்வர்க்கங்கள் பெரும்பாலும் பிற்படுத்தப்பட்டவர்களாகவும் தாழ்த்தப்பட்டவர்களாகவும் உள்ளனர். இது உழைக்கும் வர்க்கங்களுக்கிடையே அல்லது மக்களுக்கிடையே முரண்பாட்டை தோற்றுவிக்கிறது. இம்முரண்பாட்டை தீர்க்க இவர்களிடையே சாதிய ஒழிப்புப் போராட்டம் நடத்த வேண்டும். அதை கருத்துப் போராட்டம் என்ற ரீதியிலேயே தொடங்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இப்பிரிவினர் பெரும்பாலும் உழைப்புச் சக்தியை விற்பதன் மூலமே வாழ்க்கை நடத்துபவர்கள், விவசாயத்துறை வருமானத்திலும் விவசாயம் அல்லாத வருமானத்திலும் இவர்கள் அதிகம் பயன் பெறுவதில்லை. பொருளாதார நிலையில் இரு பிரிவினரும் சுரண்டும் வர்க்கத்தால் பழி வாங்கப்பட்டவர்கள். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களுக்கு நகர்ப்புற நாய்களின் வாழ்க்கைக்கூட கிடைக்காத போது சாதியப் பெருமிதத்தால் பயன் என்ன? பிற்பட்ட சாதியினர் தாங்கள் கொண்டுள்ள சாதியப் பெருமிதத்தைக் கைவிடச் செய்வதற்கு தீவிரமாகப் போராட வேண்டும். இவர்கள் கொண்டுள்ள சாதியப் பெருமிதத்தாலோ, தாழ்த்தப்பட்ட மக்களை அடக்குவதாலோ புதிதாக ஒரு கோவணத்தைக் கூட பெற முடியாது என உணரும் போது— உணர்த்தப்படும்போது சாதிய எண்ணம் மறையத் தொடங்கும். 50 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டும் அல்லாமல் பிற்படுத்தப்பட்ட மக்களும் இதில் அடங்குவர். சோசலிசமே தங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்கும் என இவர்களுக்கு உணர்த்த வேண்டும். சோசலிச சிந்தனையையும் ஜனநாயக உணர்வையும் இவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். கிராமப்புற ஆதிக்க வர்க்கங்களும், உயர் சாதியினரும், பிற்படுத்தப்பட்டவர்களில் உள்ள சாதி வெறியர்களும் தங்களின் நலனை காப்பாற்றிக் கொள்வதற்காக உழைக்கும் மக்களை மோதவிடுவதை முறியடித்து வர்க்க ஒற்றுமையை உருவாக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரையும் எதிரியாகக் கருதாமல் ஜனநாயக சக்திகளோடு இணைந்து போராட தயாராக இருக்க வேண்டும். தனிப்பட்ட ரீதியில் ஏற்படும் கைகலப்புகளை குறிப்பாக ஆராய்ந்து தீர்வுகாண வேண்டும்.

ஒடுக்கும் சாதிகளுக்கும் ஒடுக்கப்படும் சாதிகளுக்கும் இடையிலான "முரண்பாடு பகைத் தன்மையானதாகும். உயர் சாதியினரின் சாதி ஆதிக்கத்தை எதிர்த்து தாழ்த்தப்பட்ட மக்களின் சாதி ஒழிப்புப் போராட்டம் பகைத்தன்மை கொண்டதாகும். ஒடுக்கும் சாதிகளாகவும் உயர் சாதியினராகவும் பார்ப்பனர், வேளாளர், ரெட்டியார், நாயுடு, செட்டியார், மார்வாரி, பனியா, ராஜபுத்திரர்கள் ஆகியோர் உள்ளனர். ஒடுக்கப்படும் சாதிகளில் தாழ்த்தப்பட்டவர்களே சாதி ஒடுக்கு முறையை எதிர்ப்பதில் அதிகம் பங்கு வகிப்பார்கள். பிற்படுத்தப்பட்ட சாதியினரும் கூட சாதி ரீதியில் தங்களுக்கு மேல் உள்ள உயர் சாதியினரால் ஒடுக்கப்பட்டவர்களாகவே உள்ளனர் (தீண்டாமை மட்டும் தான் கிடையாது) என்பது மண்டல் கமிசன் அறிக்கை, சமூக நீதிக்கான போராட்டம் பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கமும் காட்டுகிறது. பார்ப்பனியத்தால் வருணாசிரம முறை உருவாக்கப்பட்டு 3000 ஆண்டுகளாகக் கட்டிக் காக்கப்பட்டு வருகிறது. இம்முறையானது ஆயிரக்கணக்கான சாதிகளுக்கும் துணை சாதிகளுக்கும் தாயாக உள்ளது. இச்சாதிய முறை இந்து மதத்தால் புனிதமாக்கப்பட்டு கடவுளின் பெயரால் கட்டிக் காக்கப்பட்டு வருகிறது. மொகலாயர்கள் நாட்டை ஆண்டபோதும், ஆங்கிலேயர்கள் ஆண்டபோதும் இன்னும் எத்தனையோ விதமான அரசுகள் வந்த போதும் போன போதும் சாதிய அமைப்பில் மாறுதல்கள் உண்டாக்கவில்லை. 47க்குப் பின்னர் அமைந்த பெரும் தரகு முதலாளிகளின் தலைமையிலான இந்திய அரசும் பழைய சாதிய அமைப்பில் எந்தவிதமான மாறுதலையும் உண்டாக்கவில்லை. இந்திய அரசானது நிலப்பிரபுக்கள், தரகு முதலாளிகள், பழைய மன்னர் பரம்பரையினர், மற்றும் உயர்சாதியினரால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதால் சாதி ஒடுக்குமுறையாளருக்குத் துணை போய் தாழ்த்தப்பட்ட மக்களையே அடக்கி வருகிறது. சாதிய ஒழிப்புப் போராட்டம் ஆதிக்கச் சாதிகளை எதிர்த்தும் அவர்களை பாதுகாக்கும் அரசை எதிர்த்தும் நடத்தவேண்டும். இது அரசியல் ரீதியான போராட்டமாக அமைதல் வேண்டும். உயர் சாதியினரின், நிலப்பிரபுக்களின் ஆயுதந்தாங்கிய குண்டர் படையை எதிர்த்து முறியடிக்கவும் திறன் பெற்றவர்களாக இருக்கவேண்டும். தொழிலாளர், விவசாயிகளிடையே எழுகின்ற சாதியச் சிக்கலை பகைமையற்ற விதத்தில் கருத்துப் போராட்டம் மூலம் தீர்வு காண முயற்சிக்கவேண்டும்.

பொதுவுடைமை



படிப்பகம்

www.padippakam.com

தனிப்பட்ட கைகலப்புகளினால் உண்டாகும் சிக்கலை குறிப்பாக ஆராய்ந்து முடிவெடிக்க வேண்டும். உயர் சாதியினரின் சாதிய ஒடுக்கு முறை பகைமையான வடிவத்தில், உள்ளதால் விடாப் பிடியான வர்க்கப் போராட்டம் மூலம் தீர்க்க வேண்டும்.

## மார்க்சிய – லெனினிய புரட்சியாளர் தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்பு பற்றி கொள்ள வேண்டிய அணுகுமுறை :

தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி இழிவைத் தாங்கிக் கொண்டு சும்மா இருக்கும் போது 'அமைதி' நிலவுகிறது. தன்மானத்தோடு எதிர்க்கத் தொடங்கியதும் சாதிமோதல் என்ற வடிவத்தை எடுக்கத் தொடங்கி விடுகிறது. உடனே சாதி மோதல், சாதிச்சண்டை, இது அடக்கப் படவேண்டும் என்ற கூக்குரல்கள் எழுகின்றது. அகில இந்திய அளவிலும் தமிழ்நாடு அளவிலும் இதே போக்காக உள்ளது. தமிழ்நாட்டில் சிறிய இடைவெளிக்குப் பின் மீண்டும் மீண்டும் 'சாதியப் போர்' வெடிப்பது வழக்கமாகிவிட்டது. சென்ற சாதிக் கலவரங்களுக்குப் பின்னர் கருணாநிதி 'சமத்துவபுரங்களை' உருவாக்கி சாதியப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சித்துக் கொண்டிருக்கும் போதே அடுத்த கலவரம் வெடித்தது. இப்போது சாதியச் சிக்கலுக்குத் தீர்வு காண சாதி அமைப்புகள், சாதி ஊர்வலம் போன்றவற்றிற்கு தடைவிதிக்க கருணாநிதி அரசு முடிவெடுத்துள்ளது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். வலது, இடது கம்யூனிஸ்டுகளும் இதை ஆதரிக்கின்றனர். சாதிய ஆதிக்கச் சக்திகளையும் சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளாகும் சக்திகளையும் சமமாகப் பார்க்கும் கண்ணோட்டமே சனநாயக விரோதமாகும்.

சாதிய ஆதிக்கச் சக்திகள் அமைப்பு ரீதியில் ஒன்றுதிரள்வது, சங்கம் அமைப்பது ஆதிக்கம் செலுத்துவதற்காகும். சாதிய அடிமைத் தனத்துக்கு உள்ளான தாழ்த்தப்பட்ட மக்கள் அமைப்பு ரீதியில் ஒன்றுதிரள்வதும் சங்கம் அமைப்பதும் தங்கள் மீதான ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடுவதற்கானதாகும். வலது, இடது கம்யூனிஸ்டுகள் பாரதிய ஜனதாவுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே வேறுபாட்டைக் கண்டுபிடித்து முன்னது மதவாதக் கட்சி பின்னது மதச் சார்பற்ற கட்சி எனக் கூறி காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க எல்லா முயற்சிகளையும் எடுத்து வருகிறது. ஒடுக்கும் சாதிகளையும் ஒடுக்கப் பட்ட சாதிகளையும் பாகுபடுத்திப் பார்க்கமுடியவில்லை. ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின், மக்களின் நலன்களைப் புறக்கணித்து விட்டு ஆளும் வர்க்கத்தின் தரப்புக்கு சென்று விட்ட சமூக ஜனநாயக வாதிகளாவர்.

'சாதி மோதலைத் தூண்டுவோரின் சதியை முறியடிப்போம்' என்றும், 'சாதி வாத இயக்கங்களால் சாதியை ஒழிக்க முடியாது' என்றும் மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் என்ற அமைப்பினர் கூறுகின்றனர். இவர்கள் தங்களை மார்க்சிய—லெனினிய புரட்சிகர அமைப்பு என்றும் கூறிக் கொள்கின்றனர். வலது, இடது கம்யூனிஸ்டுகள் செய்யும் அதே தவறையே இவர்களும் செய்கின்றனர். பாரதிய ஜனதா அரசு அணுகுண்டு செய்வதை அமெரிக்க ஏகாதிபத்தியம் எதிர்க்கிறது. இந்திய அரசின் ஆயுதம் தாங்கும் உரிமையை மறுக்கிறது எனக் கூறி மதவாத அரசின் அணு ஆயுதக் கொள்கையை ஆதரித்துப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால் சாதி ஒடுக்கு முறையை எதிர்ப்பவர்களை 'சாதிவாத இயக்கம்' 'சாதி மோதலைத் தூண்டுவோரின் சதி' எனக் கூறி தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்தில் இருந்து விலகி இருக்க விரும்புகின்றனர்.

தேநீர்க் கடைகளில் சமத்துவம் இல்லை, சுடுகாட்டில் சமத்துவம், வாழுமிடங்களில் சமத்துவம் இல்லை, கோயில்களிலும் சமத்துவம் இல்லை, தாழ்த்தப்பட்ட பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு ஊர்வலம் விடப்படுகின்றனர். இன்னும் எத்தனையோ விவரிக்க முடியாத கொடுமைகள். பெரும்பாலான 'ஊர்ப்' பகுதிகள் காலனிமக்களுக்கு தண்டனை வழங்கும் 'சிறப்பு நீதி மன்றங்களாக' இன்னும் சொல்லப்போனால் தண்டனை வழங்கும் கூடங்களாக செயல்படுகின்றன. சுயமரியாதையை இழந்து இவ்வளவையும் தாங்கிக் கொண்டு கம்யூனிஸ்டுகளின் வருகைக்காகக் காத்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு சும்மா இருக்க வேண்டும் என வலது, இடது கம்யூனிஸ்டுகளும், மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் போன்ற அமைப்பினரும் கருதுகிறார்கள் போலும்.

அடுத்ததாக, அரசாங்கத் தரப்பில் இருந்து தீண்டாமை ஒழிய வேண்டும். சாதி பாகுபாடு கூடாது என குரல் கொடுத்து வருகின்றனர். சமபந்தி விருந்து நடத்திப் பார்த்தார்கள். பலன் ஒன்றும் இல்லை. கருணாநிதி இப்போது சமத்துவபுரத்தை கட்டுகிறார். இது வீடு கட்டி விளையாடும் சிறுபிள்ளைகளின் செயலை ஒத்ததாகும். கருணாநிதி இலக்கியங்களை கற்பனை செய்து வந்தார். இப்போது சாதியற்ற சமுதாயத்தை கற்பனை செய்து பார்க்கிறார். தற்போது நிலவுகின்ற உற்பத்தி முறையையும், சாதியை அடிப்படையாகக் கொண்ட வேலைப் பிரிவினையையும், இதனால் உருவாக்கப்பட்ட சமுதாய உறவுகளையும் மாற்றியமைப்பதே சாதியம் ஒழிவதற்கான முன் நிபந்தனையாகும் என்பது கருணாநிதிக்குத் தெரியாது போலும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் அமைப்பு ரீதியில் திரள்வதும் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்ப்பதும் சாதியமுறை ஒழிவதற்காகப் போராடுவதும் சரியானது. அது வர்க்கப் போராட்டம். அது வெற்றி பெறுகிறதா இல்லையா என்பது வேறு. தற்காப்புக்காகக் கூட போராடலாம். அது சரியானது. மார்க்சிய— லெனினிய புரட்சியாளர்கள் அதை ஆதரிக்கவேண்டும். மா.லெ. புரட்சியாளர்கள் சோசலிச குறிக்கோள்களை அடைவதற்கு புதிய ஜனநாயகப் புரட்சியையும் அதன் அங்கமான விவசாயப் புரட்சியின் திட்டத்தை செயல்படுத்தப் போராடிக் கொண்டிருக்கும் வேளையில் தாழ்த்தப்பட்ட மக்களின் அமைப்புகள் சாதி ஒடுக்கு முறைக்கு எதிராகவும், சாதிமுறையை ஒழிக்கவும் போராடுவார்களே யானால் அது ஜனநாயக இயக்கம் என்ற முறையில் அவற்றை ஆதரிக்க வேண்டும். அந்த இயக்கங்களுடன் கூட்டுச் செயல்களையும் மேற்கொள்ள வேண்டும். முற்போக்கான பாத்திரம் ஆற்றும்போது ஆதரிப்போம். பிற்போக்கானதாக மாறும் போது அவற்றை எதிர்ப்போம். இதுவே மார்க்சிய—லெனினிய அணுகு முறையாகும். □

---

# விவசாயப் பிரச்சனையில் மாநில அமைப்புக் கமிட்டி (SOC)யின் அணுகு முறை குறித்து சில விவாத குறிப்புகள்

— மணிவண்ணன்

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

## *1980–83 முதல் 1992–95 வரை : மூன்றாம் கட்டம*

பசுமைப்புரட்சியின் மூன்றாவது கட்டத்தில் இந்திய விவசாய உற்பத்தியின் வளர்ச்சி ஒரு திருப்பு முனையை அடைந்தது எனலாம். 1980களில் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் பிராந்தியங்களிலும் விவசாயத்தில் புதிய தொழில் நுட்பத்தினால் ஏற்பட்ட வளர்ச்சி வியாபித்து இருந்தது. இந்திய அளவில் சென்ற பத்தாண்டில் அதாவது 1970களில் 2.38 சதவிகிதத்திலிருந்த விவசாய உற்பத்தி விகிதம், இந்தக் கட்டத்தில் 3.40 சதவிகித அளவை எட்டியது குறிப்பிடத்தக்கது.

இதே கட்டத்தில் வடமேற்கு பிராந்திய மாநிலமான பஞ்சாபில் விவசாய உற்பத்தி விகிதம் சிறிது குறைந்து காணப்பட்டாலும், ஹரியானா, உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்தன. கிழக்குப்பிராந்தியம் விவசாய உற்பத்தியில் சிறந்த வளர்ச்சியை அடைந்தது. அதில் மேற்கு வங்கம் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதாவது 5.39 சதவிகிதம் உயர்ந்து காணப்பட்டது. பீகாரிலும் சிறிது வளர்ச்சி கண்டது. ஆனால் அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, மாநிலங்களில் வளர்ச்சி வீதம் குறைந்தது. தனிப்பட்ட மாநிலங்களின் வளர்ச்சி விகிதம் ஏற்ற இறக்கத்துடன் இருந்தாலும், மொத்தமாகப் பார்க்கும் போது மத்திய பிராந்தியத்தைப் பொறுத்தவரை



படிப்பகம்

www.padippakam.com

அதன் உற்பத்தி வளர்ச்சி முடுக்கிவிடப் பட்டுள்ளது எனலாம். இந்தக் கட்டத்தில் மத்திய பிரதேசம், ராஜஸ்தானில் வளர்ச்சி விகிதம் சிறிதளவு உயர்ந்தாலும், மகாராஷ்ட்ரா, குஜராத் போன்ற மாநிலங்களில் வளர்ச்சி விகிதம் குறைந்து காணப்பட்டன.

இந்த கட்டத்தில் வடமேற்கு பிராந்தியத்தைக் காட்டிலும் தென் பிராந்தியத்தின் விவசாய உற்பத்தியின் வளர்ச்சி விகிதம் அபரிமிதமாக இருந்தது. தமிழ்நாடு முன் எப்போதும் இல்லாத 4.59 சதவிகித வளர்ச்சியைப் பெற்றது. (இம்மாநிலம் சென்ற பத்தாண்டில் எதிர்மறையான வளர்ச்சியை கொண்டிருந்தது காண்க) கர்நாடகமும் மிக அதிகமான வளர்ச்சியைக் கண்டது. ஆந்திராவைப் பொறுத்தவரை மீண்டும் குறைந்த வளர்ச்சியைக் கொண்டு இருந்தது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது 1980—83 முதல் 1992—95 வரையிலான கட்டத்தில் இந்தியாவின் விவசாய உற்பத்தியின் வளர்ச்சி சென்ற பத்தாண்டை விட 3 மடங்கு அதிக உற்பத்தியை எட்டியது.

விவசாய விளைபொருட்களின் மொத்த உற்பத்தியில், அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், சணல், பருத்தி, சூரியகாந்தி, கரும்புபோன்ற வணிகப் பொருட்கள் உட்பட 43 பிரதான விளை பொருட்களின் விளைச்சல் பெரும் பங்கு வகிக்கின்றன. 1962—65 முதல் 1992—95 வரையிலும் மேற்கண்ட விளைபொருட்களின் சராசரி வளர்ச்சி விகிதம் வருடத்திற்கு 2.30 சதவிகிதமாகும். இது மொத்த விளைச்சலில் 85 சதவிகிதமாகும். குறிப்பாக சொல்லப் போனால் 1980—83 முதல் 1992—95 வரையிலான மூன்றாவது கட்டத்தில் மேற்கண்ட விவசாய விளைபொருட்களின் வளர்ச்சி அபரிமிதமாக காணப்பட்டன.

இனி, விவசாய உற்பத்தி வளர்ச்சி பெற்றதற்கான அடிப்படைகளைக் காண்போம்.

(1) நவீன இடுபொருட்களின்பயன்பாடு.

(2) விவசாய நிலத்தின் அளவில் ஏற்பட்ட வளர்ச்சி (Cropped area)

(3) பயிர் வகையில் ஏற்பட்ட மாற்றங்கள் (Crop pattern)

(4) உற்பத்தி திறனில் ஏற்பட்ட வளர்ச்சி (Productivity)

போன்ற அம்சங்களே விவசாய உற்பத்தியை முதலாளித்துவ மயமாக்கும் போக்குகளுக்கு அடிப்படையாக அமைந்தன.

## (i) நவீன இடுபொருட்களின் பயன்பாடு

பாசன வசதி, பம்ப்செட்களின் எண்ணிக்கை அதிகரித்தல், டிராக்டர்கள், விதை, உரம் போன்றவற்றின் உபயோகம் விவசாய உற்பத்தியையும், உற்பத்தி சக்திகளின் உற்பத்தி திறனையும் அதிகரிக்கச் செய்துள்ளது. 1992—95 ஆண்டுகளில் அதிக விவசாய உற்பத்தியை விளைவித்த மாநிலங்களின் வரிசையில் முறையே பஞ்சாப், கேரளா, தமிழ்நாடு, ஹரியானா, மேற்கு வங்கம், உத்திரபிரதேசம், அஸ்ஸாம், ஆந்திர பிரதேசம் ஆகியவை அடங்குகின்றன. மேற்கண்ட அனைத்து மாநிலங்களிலும் (கேரளாவைத் தவிர) பாசன வசதியினால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்திருக்கின்றன. அதே போல எல்லா மாநிலங்களுமே ஒரு ஹெக்டேருக்கு 100 கிலோ உரத்தை பயன்படுத்துகின்றன. பஞ்சாபில் மட்டும் ஒரு ஹெக்டேருக்கு 296 கிலோ கிராம் உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்பே கூறியுள்ளபடி 1962—65 முதல் 1980—83 வரையில் நடைபெற்ற விவசாய உற்பத்தியை விட 1980—83 முதல் 1992—95 வரையில் உள்ள கட்டத்தில் எல்லா மாநிலங்களுமே அதிகமான உற்பத்தியைக் கட்டமைத்தன. இந்த கட்டத்தில் மட்டும் உரத்தின் பயன்பாடு, இதற்கு முந்தைய கட்டத்தைவிட இரண்டு மடங்குக்கு அதிகமாக இருந்தது. இந்த கட்டத்தில் டிராக்டர்களின் உபயோகம் இந்திய அளவில் மூன்று மடங்குக்கு அதிகமாகவும், பம்ப் செட்களின் பயன்பாடும் கணிசமான அளவில் சென்ற பத்தாண்டைவிட அதிகரித்துள்ளது என்பவை குறிப்பிடத்தக்கவைகளாகும். இந்திய அளவில் பார்க்கும் போது எல்லா பிராந்தியங்களிலுமே நவீன இடுபொருட்களுக்கும்,



படிப்பகம்

www.padippakam.com

விவசாய உற்பத்திக்கும் இடையே நெருக்க மான உறவைக் காணலாம்.

### (ii) பயிரிடப்பட்ட விவசாய நிலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

விவசாய மொத்த உற்பத்திக்கு பயிரிடப் படும் நிலப்பரப்பு அதிகரித்ததும், ஒரு குறிப் பிட்ட அளவில் தீர்மானிக்கும் காரணியா கும். பயிரிடப்படும் நிலப்பரப்பின் வளர்ச் சியை, விதைக்கப்படும் நிலப்பரப்பின் அளவு அதிகரிப்பதும் தீவிர விவசாயமும் அதாவது பயிர்த் தொழிலைத் தீவிரபடுத்தபபடுவதும் ஆகிய இரண்டும் நிர்ணயிக்கின்றன. பயிர்த் தொழிலைத் தீவிரப்படுத்துவது அல்லது செறிவாக்குவது என்பது பாசனவசதி மற்றும் குறுகியகாலப் பயிர்களை அறிமுகப்படுத்துவது ஆகியவற்றைப் பொறுத்ததாகும். 1960களின் மத்தியிலேயே இந்தியாவில் விவசாயம் செய் யக் கூடிய தன்மை வாய்ந்த பெரும்பான்மை யான நிலப்பரப்பு விவசாய உற்பத்திக்கு பயன்படுத்தபட்டன. 1962—65 முதல் 1992-95 வரையிலும் எல்லா மாநிலங்களிலுமே பயிரிடப்படும் நிலப்பரப்பின் வளர்ச்சி வீதம் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இந்த கால கட்டத்தின் வளர்ச்சி விகிதம் 0.40 சத விகிதமாகும். இது மொத்த உற்பத்தியில் 9 சதவிகித அளவை தீர்மானித்தது. பொது வாக நிகர விதைக்கப்படும் பரப்பு (Net Sown area) 1962—65 முதல் அடுத்தடுத்த பத்தாண்டுகளில், அதன் வளர்ச்சி விகிதம் குறைந்து கொண்டே இருந்தது. ஆனால் கர்நாடகம், ராஜஸ்தான்,கேரளா, ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம் போன்ற சில மாநிலங்களில் மட்டுமே 1980—83 முதல் 1992—95 ஆண்டு களில் நிகர விதைக்கப்படும் பரப்பு அதிகரித் துள்ளது.

1980—83 களோடு ஒப்பிடும்பொழுது 1992—95 களில் தீவிர விவசாயம் (Cropping intensing) உயர்ந்துள்ளது. அதாவது 1.24 என்ற அளவிலிருந்து 1.30 ஆக உயர்ந்துள்ளது. தீவிர விவசாயத்தின் வளர்ச்சி குறிப்பாக வடமேற்கு, கிழக்கு பிராந்தியங்களில் இருந் தது. அதிகமான அளவில் மேற்கு வங்கத்தில் மட்டும் 1980—83 களில் 1.32 என்ற அளவி லிருந்து 1992—95 களில் 1.62 என்ற உயர்ந்த அளவை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### (iii) பயிர்வகைகளில் (Cropping pattern) ஏற்பட்ட மாற்றங்கள்

நவீன விதை மற்றும் உரம் தொழில் நுட்பம் ஆகியவை ஆரம்பத்தில் கோதுமை, அரிசிக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. பிறகு சோயாபீன்ஸ், சூரியகாந்தி, கடுகு, பருத்தி, கரும்பு போன்ற வணிகப் பொருட் களுக்கும் படிப்படியாக அவை விரிவுபடுத்தப் பட்டு பெரு விளைச்சலைக் கண் ன. இதன் காரணமாக, இந்தியாவின் பல மாநிலங்களி லும் பலவகையான விளைபொருட்கள் விளைவிக்கப்பட்டன.

1962—65 முதல் 1992—95க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் முறையே கோதுமை, பருத்தி, கடுகு, அரிசி, இதர உணவு தானியங்கள் என்ற வரிசையில் உற்பத்தி விகிதம் அதிகரிக் கச் செய்துள்ளன. அதே கால கட்டத்தில் வேர்க்கடலை, கரும்பு போன்றவை குறைந் தளவு உற்பத்தியை கொண்டிருந்தன. குறிப் பாக 1980—83 முதல் 1992—95க்கு இடைப் பட்ட ஆண்டுகளில் தான் பயிர் வகைகளில் முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. அதற்கு முன்னர் புதிய தொழில் நுட்பம், பயிர்வகை களில் சொல்லும்படியான மாற்றம் எதை யும் நிகழ்த்தவில்லை. அவற்றில் கோதுமை, அரிசி மட்டும் விதிவிலக்காக அமைந்தன.

1962—65 முதல் 1980—83க்கு இடைப்பட்ட 18 வருடங்களில் இந்திய அளவில் பயிரிடப் பட்ட மொத்த நிலப்பரப்பு 151.31 மில்லி யன் ஹெக்டேரிலிருந்து 174.5 மில்லியன் ஹெக்டேராக மாறியது. அதில் பிரதான உணவு தானியங்கள், வணிகப் பொருட்கள் உட்பட 43 பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு, அதே காலத்தில் 151.31 மில்லி யன் ஹெக்டேரிலிருந்து 165.70 மில்லியன் ஹெக்டேராக மாறியுள்ளது. இருந்த போதி லும் அதில் உணவு தானியங்கள் விளைவிக் கப்பட்ட நிலப்பரப்பு சிறிதளவு குறைந்து காணப்பட்டாலும், உணவுதானிய விளைச்சல்



படிப்பகம்

www.padippakam.com

மாறாமலேயே இருந்தது. ஆனால் உணவு தானியங்கள் விளைவிக்கப்பட்ட நிலப்பரப்பு 1992—95களில் 4.42 சதவிகிதம் குறைந்தது குறிப்பிடத்தக்கது.

1992—95 களில், தானியங்கள் விளைவிக்கப்பட்ட கணிசமான நிலப்பரப்பை எண்ணெய் வித்துக்கள் இடம்பிடித்துக் கொண்டன. அதாவது 1980—83 களில் 10.92 சதவிகிதமாக இருந்த எண்ணெய் வித்துகள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு, 1992—95களில் 15.37 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில் 5.05 சதவிகித நிலப்பரப்பை கொண்டிருந்த இதர பயிர்வகைகள் 5.32 சதவிகிதமாக அதிகரித்தது. இந்த கட்டத்தில் மத்திய பிராந்திய மாநிலங்களைத் தொடர்ந்து தெற்கு பிராந்தியத்திலும் உணவு தானிய உற்பத்தி செய்யப்படும் நிலப்பரப்பு குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளது. இந்த இரண்டு பிராந்தியங்களும் தானிய உற்பத்தியிலிருந்து எண்ணெய் வித்துக்களின் உற்பத்திக்கு மாறிச் சென்றன. மத்திய பிராந்தியத்தில் உள்ள ம.பி.யில் 1980—83 களோடு ஒப்பிடுகையில் 1992—95 களில் சோயாபீன்ஸ் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 2.6 மில்லியன் ஹெக்டேர்கள் அதிகமானது. அதேபோல் ராஜஸ்தானில் கடுகு உற்பத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு 1.8 மில்லியன் ஹெக்டேர்கள் அதிகரிக்கப்பட்டது. தெற்கு பிராந்தியத்தில் ஆந்திர பிரதேச மாநிலத்தில் மட்டும் ஒரு மில்லியன் ஹெக்டேர்கள் கூடுதலான நிலப்பரப்பில் வேர்க்கடலை பயிரிடப்பட்டது. கர்நாடகாவில் 1.2 மில்லியன் ஹெக்டேர்கள் கூடுதலான நிலப்பரப்பில் சூரியகாந்தி பயிரிடப்படுகின்றது. அதே நேரத்தில் வடமேற்கு பிராந்தியம் பயிர் வகையில் மத்திய, தெற்கு பிராந்தியங்களுக்கு எதிர் மாறான மாற்றத்தைக் கொண்டிருந்தன. கிழக்கு பிராந்தியத்திலும் இந்த கட்டத்தில் உணவு தானியங்களின் நிலப்பரப்பு மாறாமலேயே உள்ளது.

## (iv) விவசாய உற்பத்தி சக்தி மற்றும் உற்பத்தி திறனில் ஏற்பட்ட மாற்றங்கள்

தீவிர விவசாயம், பிராந்திய பயிர்வகையில் ஏற்பட்ட மாற்றங்கள், நவீன இடுபொருள் போன்ற அம்சங்கள் விவசாய உற்பத்தையைப் பெருக்க அடிப்படையாக அமைந்தன என்று பார்த்தோம். இதன் உடன் விளைவாக உற்பத்தி சக்திகளின் உற்பத்தி திறனும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

புதிய தொழில் நுட்பம் அமுல்படுத்தப்பட்ட முதல் கட்டமான 1962—65 முதல் 1970—73க்கு இடைப்பட்ட காலத்தில் எல்லா மாநிலங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், மொத்த ஆண் விவசாயத் தொழிலாளர்களில், 5 மாநிலங்களில் உற்பத்தியில் ஈடுபட்ட 10.92 சதவிகிதம் பேர் 1.5 சதவிகிதத்திற்கும் மேலான உற்பத்தி திறனை கொண்டிருந்தனர். அடுத்த கட்டத்தில் 1970—73 முதல் 1980—83 வரையிலும் அதே அளவு உற்பத்தித் திறனைக் கொண்டிருந்த ஆண் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 5 மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் 24.05 சதவிகிதப் பேராக இருந்தனர். அடுத்ததாக 1980—83 முதல் 1992—95க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் 9 மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் மொத்த ஆண் விவசாயத் தொழிலாளர்களில் 53.70 சதவிகிதம் பேர் ஆண்டுக்கு 1.5 சதவிகிதத்திற்கு மேலான உற்பத்தித் திறனைக் கொண்டிருக்கின்றனர். இந்த கடைசி கட்டத்தில் 7 மாநிலங்களில் ஒவ்வொன்றிலும், மொத்த ஆண் விவசாயத் தொழிலாளர்களில் 37.34 சதவிகிதம் பேர் வருடத்திற்கு 2 சதவிகித உற்பத்தித் திறனைக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவை முறையே தமிழ்நாடு, மேற்கு வங்கம், ராஜஸ்தான், ஹரியானா, மத்திய பிரதேசம், கர்நாடகா மற்றும் பஞ்சாப் ஆகும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து 1980—83 முதல் 1992—95 வரையிலும் ஆண் விவசாய தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் அபரிமிதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. உழைப்பு சக்திகளின் உற்பத்தித் திறனில் கண்ட வளர்ச்சி வடமேற்கு பிராந்தியம் மட்டுமின்றி தெற்கு மற்றும் கிழக்கு பிராந்தியத்திலும், மத்திய பிராந்தியத்திலும் காணப்படுகின்றது. மேலும் விவசாய உற்பத்தி சக்திகள், விவசாயமற்ற



படிப்பகம்

www.padippakam.com

தொழில்துறைக்கு ஈர்க்கப்படும் போக்கு வேகமாக நடைபெற்று வந்துகொண்டு இருக்கின்றன.

### வர்க்க அணிசேர்க்கை

இந்திய விவசாயத்தில் கூலி உழைப்பு குறிப்பிடத்தக்க அளவு வளர்ந்துள்ளது. 1960களுக்குப் பிறகு கிராமப்புற உழைப்புச் சந்தை பெருகி வருவதைக் காண முடிகிறது. விவசாய உற்பத்தி முறையில் ஏற்பட்ட மாற்றங்களும், நிலமற்றவர்கள் அதிக எண்ணிக்கையில் வளர்ந்து வருவதும் இதற்கு அடிப்படையாக அமைந்தன. விவசாய உற்பத்தியில் ஈடுபடும் மொத்த மக்கள் தொகையில் கூலி விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1961 ஆம் ஆண்டில் 24 சதவிகிதமாகவும், 1972—73 களில் 34 1 சதவிகிதமாகவும், 1982—83 களில் 39.6 சதவிகிதமாகவும், 1991 ஆம் ஆண்டில் 40.8 சதவிகிதமாகவும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. 1991 ஆம் ஆண்டில் தற்காலிக தொழிலாளர்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் இது 47 சதவிகிதமாகும். இதைத் தவிர்த்து 1971 முதல் 1990 வரையிலும் சுமார் 50 மில்லியன் விவசாயத் தொழிலாளர்கள் நகர்ப்புறங்களுக்கு குடி பெயர்ந்துள்ளனர்.

விவசாய உற்பத்தி அதிகரிப்பு என்பது தீவிர விவசாய சாகுபடியையும், உற்பத்தித் திறனையும் பொறுத்து அமைகின்றது. புதிய விவசாய உற்பத்தி முறையானது அதிக அளவிலான உற்பத்திச் சாதனங்களைச் சார்ந்தே இருக்கின்றது. அதன் விளைவாக உற்பத்திச் சக்திகளின் உற்பத்தித் திறனும் வளர்ந்து கொண்டிருக்கின்றது. உற்பத்திச் சக்திகளில் குறிப்பாக ஆண் தொழிலாளர்களின் உற்பத்திதிறனில் ஏற்பட்ட வளர்ச்சியை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

இன்னொருபுறம் புதிய நிலவுடைமை வர்க்கங்கள் உருவாகியுள்ளன. முதலாளித்துவ நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், சாகுபடியாளர்கள், சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் என முதலாளித்துவ நிலவுடைமை வர்க்கங்கள் அடங்கிய கிராமப்புற சித்திரம் இன்று புதிய உள்ளடக்கத்தைப் பெற்று விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

### வணிக மற்றும் வட்டி மூலதனம் குறித்து

கிராமப் பொருளாதாரம் வணிக மூலதனம் மற்றும் வட்டி மூலதனம் ஆகியவற்றால் மட்டுமே தீர்மானிக்கப்படுகின்றது என்றும், அவையே முதலாளித்துவ விவசாய வளர்ச்சிக்குப் பெருந்தடையாக உள்ளது என்றும் SOC போன்ற 'அரை நிலப்பிரபுத்துவத்தை' முன்வைக்கும் தத்துவவாதிகள் கூறுகின்றனர். மேலும் ''கூட்டுறவு வங்கிகள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கோடிக்கணக்கில் அளிக்கப்பட்ட விவசாயக் கடன்கள் வட்டி லேவாதேவிக் கடனின் மறு வடிவம் மட்டுமே ஆகும்'' (பக்-173) என்கின்றது SOC.

இனி வட்டி மற்றும் வணிக மூலதனம் பற்றியதான மார்க்சியக் கண்ணோட்டம் என்ன என்பதையும், அவை முதலாளித்துவ பொருளாதாரத்தோடு என்ன உறவைக் கொண்டிருக்கின்றன என்பதையும் ஆராய்வோம்.

பொதுவான அர்த்தத்தில் பார்த்தால், வட்டி மற்றும் வணிக மூலதனமும், தொழில் மூலதனமும் ஒத்த பொருளாதார நிகழ்வையே குறிப்பிடுகின்றது. மேலும் வரலாற்று ரீதியாக வட்டி மற்றும் வணிக மூலதனம் எப்போதுமே தொழில் மூலதனத்திற்கு முந்தையதாக விளங்குகின்றது. அவை இரண்டும் தொழில் மூலதனம் உருவாவதற்கு அவசியமான முன் நிபந்தனையாக அமையும் அதே சமயம், அவை மட்டுமே போதுமானதாக ஆகி விடாது.

வணிக மற்றும் வட்டி மூலதனம் மற்றும் தொழில் மூலதனம் ஆகிய இரண்டிற்குமுள்ள உறவைக் குறிப்பிடும் பொழுது ''வணிக மற்றும் வட்டி மூலதனத்தின் சுயேச்சையான வளர்ச்சி என்பது தொழில் மூலதனத்தின்



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சிக்கு எதிர்மறையான உறவைக் கொண்டிருக்கும்'' என லெனின் கூறுகின்றார். அதாவது தொழில் மூலதனத்தின் வளர்ச்சி வணிக மற்றும் வட்டி மூலதனத்தின் வளர்ச்சியைப் பின்னுக்குத் தள்ளுகின்றது. இந்திய நிலைமைகளில் இதைக் கண்கூடாகக் காண இயலும் 1971 ஆம் ஆண்டு நிலவரப்படி கிராமக் கடனில் 52.6 சதவிகிதம் நிலப்பிரபுக்கள், விவசாய லேவாதேவிக்காரர்கள் மற்றும் வணிகர்களிடமிருந்து பெற்றதாகும். ஆனால் 1981 இல் இந்த கடன் 22.9 சதவிகித அளவுக்கு தாழ்ந்துள்ளது. அதே சமயம், 1981—82 ஆண்டுகளில் விவசாய உற்பத்தியாளர்களின் நிறுவனக் கடன் 63.2 சதவிகிதமாகவும், நிறுவனமல்லாத கடன்வகையில் 36.8 சதவிகிதமும் ஆக இருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். மேற்கண்ட விவரங்கள் கிராம மூலதனச் சந்தையில் வணிக மற்றும் வட்டி மூலதனம் குறைந்த வண்ணமாகவும், நிறுவனமயமாக்கப்பட்ட அமைப்புகளின் மூலம் பெறப்படும் மூலதனமே கிராமப் பொருளாதாரத்தைக் குறிப்பாக விவசாயப் பொருளாதாரத்தை தீர்மானிக்கின்றது.

இங்கு நாம் சுட்டிக் காட்ட வேண்டிய இன்னொரு விசயம் என்னவென்றால், அமைப்பு ரீதியான நிறுவனக் கடனுக்கும், நிறுவனமல்லாத கடன்களுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை உள்வாங்கிக் கொள்ள SOC விடாப்பிடியாக மறுக்கின்றது. எனவேதான் நிறுவனங்களின் மூலம் பெறும் கடன், வட்டி மற்றும், வணிகக் கடன்களின் மறுவடிவமே என்று கூறுவதன் மூலம் அவற்றிற்கிடையே உள்ள சாராம்ச வேறுபாடுகளை உணரத் தவறிவிட்டது.

கூட்டுறவு வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், விவசாய சங்கங்கள் அனைத்தும் பணக்கார விவசாயிகள், முதலாளித்துவ நிலப்பிரபுக்கள் மற்றும் நடுத்தர விவசாயிகளின் நலன்களை பேணுகின்றன. அதே சமயம் அவை யாவும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைபொருட்களே அன்றி வேறல்ல.

மேலும் விவசாய சமூகத்தினர் பெற்ற கடனில் 69 சதவிகிதம் உற்பத்திச் செலவுக்காகவும், மீதமுள்ள 21 சதவிகிதம் மட்டுமே இதர செலவுகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. (1981 ஜூன் 30 நிலவரப்படி) மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கத்தில் விவசாயத்துறை கணிசமான பங்கை செலுத்துகின்றது. விவசாயத்தில் பெறப்படும் மொத்த உபரியில் மூன்றில் ஒரு பங்கு மீண்டும் மறுஉற்பத்திக்கு இடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## சிறு வீத விவசாய உற்பத்தி பற்றி

சிறுவீத விவசாயம் நிலவுவது முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தில் கூட தவிர்க்க இயலாத ஒரு அம்சமாக இருக்கின்றது. முதலாளித்துவ விவசாயிகள், கூலியுழைப்பை வாடகைக்கு அமர்த்திக் கொள்வதற்கான தேவை அதிகமாகின்றது. அந்த சமயங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு துண்டு நிலத்தை அளிக்கின்றனர். இதன் மூலம் விவசாயத் தொழிலாளர்களின் கூலியுழைப்பை தேவையான சமயத்தில் பெற உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். ஒரே பருவத்தில் இரட்டை பயிர்முறையில் ஈடுபடும் பணக்கார விவசாயிகள் அறுவடைக்கும், அடுத்த பயிருக்கான உழுதல் பணிக்கும் தேவைப்படும் கூலியுழைப்பு பற்றாக் குறையை ஏற்படுத்துகின்றது. இதை நிவர்த்தி செய்யும் பொருட்டு துண்டு நிலத்தை அளிப்பதன் மூலம் தங்களுக்கு தேவையான கூலியுழைப்பை தர கிராமப்புற பாட்டாளி வர்க்கம் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இது பசுமைப்புரட்சியின் தாக்கத்தினால் முதலாளித்துவ விவசாயம் வளர்ந்துள்ள பிரதேசங்கள் பட்டவர்த்தனமாகத் தோன்றுகின்றது.

பிற பகுதிகளில் சிறு விவசாயம் நீடிப்பது முதலாளித்துவ நிலக்குவிதலுக்கு தடையாகவும் உள்ளது. விவசாயத் தொழிலாளர்களையும் விடவும், அதிகமாகவும் கூடுதலான உழைப்பையும் செலுத்தும் அதே சமயம், சிறு விவசாயிகள், குறைந்த அளவிலான நுகர்வையே பெறுகின்றனர். இதன் மூலம் சிறு விவசாயிகள், நிலவுடைமையாளர்களுக்கு வாடகையாகவும் வட்டியாகவும் தங்கள் உபரியை செலுத்துகின்றனர். பெரு நிலவுடைமையாளர்களுக்கு கூலியுழைப்பை பயன்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தி விவசாயத்தில் ஈடுபடுவதை விடவும் நிலத்தை குத்தகைக்கு விட்டு வாடகைப் பெறுவது லாபகரமாக உள்ளது.

இந்த முறையிலான சிறு விவசாயிகள் நிலத்தோடு பழைய முறையிலான வகையில் கட்டுண்டு கிடக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பொதுவாக பார்க்குமிடத்து அவர்கள் நிலப்பிரபுத்துவ கட்டுக்குள்ளும் அடிமையாக இருக்கவில்லை, அவர்கள் பழைய வகையிலான உற்பத்தி முறையிலேயே இன்னும் நீடிக்கவில்லை என்பதே இன்றைய யதார்த்தமாக உள்ளது. இடுபொருட்கள், எந்திரங்கள் போன்ற உற்பத்திச் சாதனங்களுக்கான சந்தைக்குள் சிறுவிவசாயிகளும் தவிர்க்க இயலாமல் ஈர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் ஏதாவதொரு விதத்தில் முதலாளித்துவ விவசாய உற்பத்தியோடு தங்கள் உறவை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

ஆனால் சிறுவீத விவசாயத்தை 'அரை நிலப்பிரபுத்துவத்தின்' அம்சமாக மட்டுமே SOC போன்ற மார்க்சிய லெனினிய குழுக்கள் கருதுகின்றனர். அது, நிலப்பிரபுத்துவ தளைகளின் கீழ் கட்டுண்டு கிடப்பதாக முடிவுக்கு வருகின்றனர். இது உண்மை நிலவரங்களுக்கு முற்றிலும் மாறானதாகும்.

## முடிவுரை

விவசாய உற்பத்தியில் முதலாளித்துவ வளர்ச்சி என்பது இரண்டு அம்சங்களாக விளங்குகின்றது. ஒன்று முதலாளித்துவத்திற்கு முந்தைய பழைய உற்பத்தி முறை முற்றிலும் அழிதல் (depeasantisation) மற்றது பரிவர்த்தனை பண்ட பொருளாதாரம் வளர்தல் (commodity production). இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றின் விளைவால் ஒன்று வளரும் தொடர் போக்காகவும், ஏற்றத்தாழ்வான போக்காகவும் இருந்து இந்திய விவசாய உற்பத்தியில் பண்ட பொருளாதார வளர்ச்சி இடம் பிடித்துள்ளது.

இந்திய அரசின் விவசாய சீர்திருத்தங்களுக்குப் பிந்தைய விவசாய உற்பத்தி, வியாபார மயமாக்கலையும், நிறுவனமயமாக்கலையும் கொண்டு விளங்குகின்றன.

பசுமைப் புரட்சியினால் பாதிப்பு ஏற்படுத்தப்பட்ட பிரதேசங்களில், 'சிறப்பான விவசாயப் பகுதிகள்' ஏற்பட்டுள்ளன. அதாவது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட பயிர் விளைவிக்கும் விவசாய பிரதேசங்கள் ஆங்காங்கே உருவாக்கப்பட்டுள்ளன. வெவ்வேறு விவசாயப் பிரதேசங்களுக்கும் இடையிலும் விவசாயப் பொருட்களுக்குமிடையிலும் பரிவர்த்தனை செய்துக் கொள்ளப்படுகின்றன. இதர விவசாய பகுதிகளும் கூட பண்ட சுழற்சியின் வலைப்பின்னலுக்குள் கொண்டு வரப்படுகின்றன. இதன் விளைவாக சரக்கு உற்பத்திக்குத்தேவையான உழைப்பிற்கான தேவை கிராமப்புறத்திலிருந்து எழுந்துள்ளது.

விவசாய சமூகத்தினரிடையே முதலாளித்துவ வர்க்க முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. விவசாய சமூகத்தில் தோன்றியுள்ள புதிய வர்க்கங்கள் இந்திய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முன்னேறிய சக்திகளாகும். விவசாயத்தில் உருவாகியுள்ள முதலாளித்துவ வளர்ச்சி பழைய வகை நிலப்பிரபுத்துவ வர்க்கம் சிதைந்து முதலாளித்துவ நிலப்பிரபுக்களாகவும் முதலாளித்துவ சாகுபடியாளர்களாகவும் மாறியுள்ளது. பணக்கார விவசாய வர்க்கத்தையும் தோற்றுவித்துள்ளது. சிறுவிவசாயிகள் குத்தகை விவசாயிகள், மற்றும் துண்டு நிலங்களைப் பெற்ற கிராமப்புற தொழிலாளிவர்க்கம் போன்றவை அடங்கிய சிறுவீதப் பொருளாதாரம் கிராமப்புற உற்பத்தியைத் தீர்மானிக்கும் இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

காலங் கடந்த பழைய வகையான விவசாயம் ஒரு கிராமத்தின் எல்லையைத் தாண்டியதேயில்லை. நிலத்தோடு கட்டுண்ட உழைப்பு முறை அதைத் தக்க வைத்துக் கொண்டிருந்தது. முதலாளித்துவம்தான் முதன் முதலாக இறுகிப்போயிருந்த பழைய உற்பத்தி முறையை உடைத்தெறிந்து நிலத்தை பண்டம் என்ற அளவில் மாற்றியமைத்துள்ளது. விவசாய விளைபொருட்கள் முதலாவதாக உள்ளூர் மட்டத்திலும் இரண்டாவதாக தேசிய அளவிலும் அடுத்ததாக



படிப்பகம்

www.padippakam.com

உலக அளவிலும் சந்தைப் பொருளாதாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு உலகச் சந்தையானது தனிமைப்பட்டு தேக்கத்திலிருந்த விவசாய உற்பத்தி அலகான 'கிராம சமூகத்தை' முற்றிலும் உடைத்தெறிந்துள்ளது. அதன் தொழில் நுட்ப மாற்றத்திலும் உற்பத்தி சக்திகளின் சமூக உழைப்பின் வளர்ச்சியிலும் பெரிய உந்துசக்தியாக விளங்கியது. இயற்கை விவசாயம், பன்முக வடிவத்தில் வளர்ந்துள்ள வணிக விவசாயமாக மாறியுள்ளது. பழைமையான உற்பத்திக் கருவிகளினிடத்தில் வளர்ச்சியடைந்த விவசாயக் கருவிகள் இடம் பிடித்துள்ளன. பழைய வகையான விவசாய முறைகள் கைவிடப்பட்டு புதிய வகையான விவசாய உற்பத்தி முறைகள் உருவாகியுள்ளன. பெருவீத உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் மட்டுமின்றி சிறுவீத விவசாய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் கூட பழைய வகையான இயந்திரங்கள், பயிர் முறைகள், இடுபொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட முடிவதில்லை.

நாம் ஏற்கெனவே பார்த்தவாறு, முதலாளித்துவ விவசாயம் எல்லா இடங்களிலும், சம அளவில் ஒரே மாதிரியாக வளர்வதில்லை. அதன் ஒரு அம்சம் ஒரு இடத்திலும், இன்னொரு அம்சம் இன்னொரு இடத்திலும் வளர்கின்றன. அதன் அனைத்து அம்சங்களுமே சந்தை உற்பத்தியை நோக்கி ஈர்க்கப்பட்டுள்ளன. வணிக விவசாய உற்பத்தியில் தனித்தனி சிறப்பு விவசாயப் பகுதிகள் ஏற்பட்டிருப்பது, மிகை உற்பத்தி, குறைவான நுகர்வு போன்ற முதலாளித்துவ நெருக்கடிகளை தோற்றுவிப்பதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. முதலாளித்துவ விவசாய வளர்ச்சியின் வேறுபட்ட வடிவங்களும், பகுதிகளும், ஏற்றத்தாழ்வான வளர்ச்சிப்போக்குகளும் நாடுமுழுக்க விவசாய மக்களின் இடப்பெயர்வுகளை பெருமளவில் அதிகரித்துள்ளன. நிலத்தோடு கட்டுண்ட உழைப்பு முறை மாற்றப்பட்டு வாடகை உழைப்பு நிறுவப்பட்டுள்ளது. இது இந்திய முதலாளித்துவ விவசாய வளர்ச்சியில் ஒரு குறிப்பிடத் தகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. இது விவசாய உற்பத்தி சமூகமயமாக்கப்பட்ட உற்பத்தியாக மாறியுள்ளதை குறிப்பதாகும்.

விவசாய உற்பத்தியின் இன்னொரு பகுதியாக முதலாளித்துவத்திற்கு முந்தைய உற்பத்தி முறையின் மிச்ச சொச்சங்கள், அதன் உண்மையான அர்த்தத்தில் மிச்ச சொச்சங்களாக மட்டுமே நீடிக்கின்றனவேயன்றி விவசாய பொருளாதாரத்தை தீர்மானிக்கும் அம்சமாக இருக்கவில்லை. இந்திய விவசாயம் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு மாறிச் செல்லும் கட்டம் துவங்கி விட்டதாகக் கருதலாம். சமூகத்தின் மொத்த உற்பத்தியில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகள் அடிப்படை முரண்பாடுகளினிடத்திலிருந்து இடம் பெயர்ந்து விட்டது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் விவசாயத்தில் நிலைநாட்டுவதற்கான அடிப்படைகள் உருவாகி விட்டன.

மேலும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு அரை நிலப்பிரபுத்துவமே பெருந்தடையாக இருக்கின்றது என்ற தவறான புரிதலை அரை நிலப்பிரபுத்துவ தத்துவவியலாளர்கள் கொண்டிருக்கின்றனர். இது உற்பத்திச் சக்திகளுக்கும், உறவுகளுக்குமுள்ள இயங்கியல் தொடர்புகளைப் புரிந்து கொள்வதில் உள்ள பிரச்சனையாகும். இன்று ஏகாதிபத்தியம் உலகம் தழுவிய முதலாளித்துவ பொருளாதார சிக்கலான வலைப் பின்னலில் இந்தியாவை தனது ஆதிக்கத்தின் கீழ் நிலைநிறுத்தியுள்ள அதே சமயம், பின்தங்கிய நாடுகளின் நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களைக் கொண்டு உற்பத்திச் சக்திகளை வளரவிடாமல் தடுக்கின்றது. எனவே முதலாளித்துவமே அதன் பிற்போக்கான இயல்புகளுக்கேற்ப உற்பத்திச் சக்திகளை வளரவிடாமல் விலங்கிட்டு வைத்துள்ளது. எனவே இங்கு உற்பத்திச்சக்திகள் வளரத் தடையாக உள்ள பிற்போக்கான முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை உடைத்தெறிவதே முன் நிபந்தனையாக நம் முன்னே உள்ளது.

□



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு மின்னல் வீச்சு!

—புதிய ஜீவா

மிகவும் ஆழமான, செறிவான விஷயங்களையே நிறைய எழுதியுள்ள தோழர் கோ. கேசவன் நேரில் பேசும் போது மிகுந்த நகைச்சுவையுடன் பேசுவார். காட்சிக்கு எளியவராகவும், கடுஞ்சொல் அறியாதவராகவும் இருந்த தோழர், ஓர் அறிஞர், இலக்கிய விமர்சகர், வரலாற்றாய்வாளர், மக்கள் இயக்கங்களின் ஆதரவாளர், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தோழர். அவருடன் ஆன என் நினைவுகளிற் சில...

ஓயாத அலைச்சலும், கடும் உழைப்பும் உள்ள தோழர் கேசவனிடம் ஒரு முறை கேட்டேன்.

''சர்க்கரை வியாதின்னா உணவுக்கட்டுப்பாடு, ஓய்வு அவசியமாச்சே! நீங்க இப்பிடி ஓயாம அலைஞ்சுக் கிட்டிருக்கிங்களே! எப்படிச் சமாளிக்கிறீங்க?''

கேசவன் அமைதியாக என்னைப் பார்த்தார். சொன்னார் :

''ஜீவா, சர்க்கரை வியாதி ஒரு வியாதி யல்ல; ஊனம். நம் கையில் சுண்டு விரல் போய்ட்டதுன்னா என்ன பண்றம்? அந்த ஊனத்தோட வாழப் பழகிக்கிறம்ல. அது மாதிரி சர்க்கரை வியாதியோட வாழப் பழகிக்கிறனும்.''

பத்தாண்டுகளுக்கு முன்பு எனினும் தோழரின் சொற்கள் இன்று சொன்னது போல காதுகளுக்குள் ஒலிக்கின்றன. 'தோழமை' இதழ் வேலை, ஆசிரியர் இயக்கப் பணிகள், ஆராய்ச்சிப் பணிகள் என்று தோழர் அயராமல் உழைத்து வந்த காலம் அது! ஆமாம்! தோழர் என்றைக்குத்தான் ஓய்ந்தார்! மரணம் அவரைத் தழுவும் வரை!

எவ்வளவோ அமைப்புப் பிரச்னைகள், கடும் அவதூறுகள், விமர்சனங்கள், பின்னடைவுகள் சுற்றுச் சூழலை மந்தப்படுத்தியிருந்த போதிலும், கொஞ்சமும் தளராமல் மெய்வருத்தம் பாராமல் திட்டமிட்டு உழைத்தவர் தோழர் கேசவன். கிட்டதட்ட 23 நூற்களும், ஏராளமான கட்டுரைகளும், எழுதியுள்ளார். அவை அவருடைய கடினமான உழைப்பிற்கான ஆதாரங்கள்! ஆவணங்கள்! இத்தகைய மனஉறுதியும், திட்டமிடலும் இன்று நம்மில் எத்தனைப் பேரிடம் உள்ளன?

தோழர் சுருக்கமாக, எனினும் தெளிவாகத் தனது கருத்துக்களைச் சொல்வார். வரலாற்றில் முதுகலை படித்துக் கொண்டிருந்தேன் அப்போது. எப்படி வரலாற்றைப் படிப்பது, புரிந்து கொள்வது, மார்க்சிய அடிப்படையில் எப்படி விளங்கிக் கொள்வது, தேர்வுகளை எப்படி எதிர்கொள்வது போன்ற ஏகப்பட்ட சந்தேகங்களுடன் தோழரை அணுகினேன், ஆசிரியரை பயபக்தியுடன் அணுகும் பழங்கால மாணவனைப் போல. தோழர் பளிச்சென்று சொன்னார் :

''எம். ஏ., வரலாறை முதலில் முடியுங்கள். அப்புறம் வரலாற்றைப் படிக்கலாம்''

இன்றையக் கல்விமுறை, வரலாற்றை எழுதும் விதம், போன்றவற்றைப் பற்றிய விமர்சனமாக அவர் பதில் எனக்குத் தோன்றியது.

''நீங்கள் வரலாற்றாசிரியரா? தமிழ் அய்யாவா?'' —கேட்டேன்.

''எனக்கே அந்தச் சந்தேகம் உண்டு''

தோழரின் எழுதும் வேகம் பிரமிக்கத்தக்கது. ஞாயிற்றுக் கிழமை இரவு விழுப்புரத்தில் தோழமைக்கு அவர் எழுதுவதாக ஒப்புக்கொண்ட கட்டுரைகள் வியாழக்கிழமைக்குள் சென்னைக்கு அஞ்சலில் வந்து சேர்ந்திருக்கும்! திங்கட்கிழமை திருச்சிக்குச் சென்று



படிப்பகம்

www.padippakam.com

கல்லூரிப்பணி முடித்து, அன்று மாலையே நான்கைந்து கட்டுரைகளை எழுதி செவ்வாய்க்கிழமை அஞ்சலில் சேர்த்திருந் தாலொழிய வியாழக்கிழமை எப்படி சென்னையில் கிடைத்திருக்க முடியும்? ஓயாத கடும் உழைப்பு! இப்படி அதிசீக்கிரம் நம்மை விட்டுப் பிரிய இருப்பதை முன்னரே அறிந்தி ருந்ததால் தான் கேசவன் அப்படி உழைத் தாரோ?

கூட்டங்களில், பொது நிகழ்ச்சிகளில் எத்தனையோ கடும் விமர்சனங்கள், தனி மனிதத் தாக்குதல்கள், அவதூறுகள், அம்பு களாகத் துளைத்தாலும், அவற்றால் கொஞ் சமும் பாதிக்கப்படாமல், உணர்ச்சிவயப் படாமல், தாக்குதலின்— விமர்சனத்தின்— மையமான பொருளை மட்டும் எடுத்துக் கொண்டு அதற்கு மட்டும் தெளிவாகச் சுருக்கமாக ரொம்பவும் அடக்கமாகப் பதில் சொல்வார். விமர்சனங்களால், வார்த்தை களால் அவரை யாரும் கோபப்படுத்திவிட முடியாது!

எந்தவிதமான மாயைகளுக்கும் பலியா காமல், எதையும் அறிவுப்பூர்வமாக அணுகும் தோழர் கேசவன் புதிய இடதுகளுக்கு ஒரு சவாலாகவே இருந்தார்!

தமிழக வரலாற்றை மார்க்சிய அடிப் படையில் புரிந்து கொள்ள விரும்பும் யாரும் கேசவனைத் தவிர்க்க இயலாது!

மார்க்சிய கண்ணோட்டத்தில் இலக்கி யங்களை அணுகிய அவரது விமர்சனங்களில் இட்டு நிரப்பப்பட வேண்டிய பலஇடைவெளி கள் இருப்பினும், அவருடைய பணியை யாரும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது!

சமகால அரசியல் நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்ள விரும்பும் யாரும்— பூமி யைப் புரட்டும் நெம்புகோல்கள் எதுவும்— கேசவனின் உலைக்களத்தில் சிறிது கால மேனும் பக்குவப் படாமல் பெரிய அளவுக் குச் சாதிக்க முடியாது!

எல்லாவற்றுக்கும் மேலாக தோழர் கேசவன் தன்னுடைய வாழ்நாளில் ஓர் உண்மையான கம்யூனிஸ்ட்டாக இருந்தார். புரட்சிகர இடதுசாரி அமைப்புகளுடன் அவர் எப்போதும் தொடர்புடையவராக இருந் தார்.

தோழர் கேசவனின் மறைவிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு, அவருடைய சகோதரர் கேசவனின் மெலிந்த உடலைப் பார்த்து கவலை தொனிக்கச் சொன்னாராம், 'உடம் பைப் பார்த்துக் கொள் கேசவா''

கேசவன் சிரித்துக் கொண்டே சொன்னா ராம் :

''நான் பந்தயக்குதிரை போல. ஓடிக் கொண்டே இருக்கணும்''

பந்தயக்குதிரை ஓடிக் கொண்டே இருந் தது. அதன் ஓட்டத்தில் தடுமாற்றம் இல்லை. அதற்கு ஓர் இலக்கு இருந்தது. அதன் உள்ளத் தில் கனல் இருந்தது. அதன் பார்வையில் தெளிவு இருந்தது. அது ஓடிக் கொண்டே இருந்தது, உடலால் களைத்து விழும் வரை.

அது ஏந்திய புரட்சிக்கனலை தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டும், நாம். அணைய விடாமல். □

---


# விற்பனைக்கு

இந்திய பொதுவுடைமை கட்சி இ. க. க. (மா. லெ) செங்கொடி (ரெட்ஃபிளாக்), மக்கள் யுத்தம் (பீப்பிள்ஸ் வார்), விடுதலை (லிபரேசன்) இடை யிலான கருத்தியல் - அரசியல் வேறுபாடுகளை சித்தரிக்கும் (இந்த பொதுவுடைமை இதழ் தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் அடிப்படையில்) குறுநூல் வெளி யாகியுள்ளது.

**விலை : ரூ. 10-00**

**பிரதிகளுக்கு அணுகவும்**

**த. சிலப்பதிகாரம், எண்-1, முதல் தெரு, சோமசுந்தர பாரதி நகர், வடபழனி சென்னை-600 026.**




படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் யுத்தம் போல்சுவிக் தலைமையுடன் ஒரு கருத்துப் போர்

—தாஸ்

பொதுவுடைமை இதழ்—5இல் தோழர் LGS கருத்தியல் போராட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் திட்டப் பிரச்சனையை முன் வைத்தல் ஒன்றுபட்ட கட்சிக்கு அடிப்படை என்ற கட்டுரையில் AMK விஞ்ஞான பூர்வ திட்டத்தின் தேவையை உணர்ந்ததாகக்கூறியுள்ளார். அதற்காக அவருடைய 1988 ஆம் ஆண்டு சிறப்புக் கூட்ட அறிக்கையில் இருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டியுள்ளார். இவை ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கான பொதுவான அணுகுமுறையாகும். இந்தியாவின் மா.லெ. கட்சியின் திட்டம் குறித்து ''இந்திய பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள்களை துல்லியமாக முறைப்படுத்தும் திட்டத்தை உருவாக்குவதற்கான போதிய தத்துவப்பணி ஆற்றப்படவில்லை. மாறாக சீனப்புரட்சியின் நிலைமைகள் அப்படியே இங்கிருப்பதாக கருதிக் கொள்ளப்பட்டது'' என கூறுகிறார். அதே சிறப்புக் கூட்டத்திலேயே 70 ஆம் ஆண்டு திட்டம் அடிப்படையில் சரியாக உள்ளது என்ற அடிப்படையில் செயல் தந்திரம் வகுத்து தனது குழுவைப் போல்சுவிக்காக மாற்றுவது பற்றியும் கூறுகிறார். முதல் கருத்தில் போதிய தத்துவப் பணி ஆற்றப்படவில்லை. சீனப் புரட்சியின் நிலைமைகள் அப்படியே இங்கிருப்பதாகக் கருதிக் கொள்ளப்பட்டது என்கிறார். இரண்டாவதாக திட்டம் அடிப்படையில் சரியாக உள்ளது என்கிறார். இதன் மூலம் சீன நிலைமைகளும் இந்திய நிலைமைகளும் அடிப்படையில் சரியாக உள்ளது என்ற முடிவுக்கு வருகிறார். அந்தக் குழுவின் இன்னொரு தலைவர் முகிலன் கூறுகிறார். ''திட்டம் அடிப்படையில் சரியானது என்பதை ஏற்றுக் கொள்வதும் கிடையாது, விமர்சிப்பதும் கிடையாது (திட்டத்திற்கு ஒப்புதல் பெறும் பிரச்சனையே கிடையாது)'' முகிலன் கடிதம் பக்-4 கட்சித் திட்டத்திற்கு முகிலனின் ஒப்புதல் இருந்தாலே போதும் அவை புரட்சியின் வெற்றிக்கு வழி வகுத்துவிடும் போலும்.

70— ஆம் ஆண்டு திட்டம் இந்தியப் புரட்சியின் அடிப்படை பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவில்லை, லெனினிய முறையிலும் அமைந்திருக்கவில்லை என நாம் விமர்சனம் வைத்துள்ளோம். ஒருவேளை AMK திட்டம் பற்றி சிந்தித்திருந்தாலும் தனது குழுவுக்கு ஒரு திட்டம் வேண்டும் என்ற அளவில் மட்டும் சிந்தித்திருப்பாரே ஒழிய LGS கூறுவது போல ஒன்றுபட்ட கட்சியை கட்டுவதற்கான கருத்துப் போரின் நிகழ்ச்சி நிரலில் திட்டம் பற்றிய பிரச்சனையை முன் வைக்க வேண்டும் என்பதை அறிந்திருக்கவில்லை. திட்டப் பிரச்சனையை தீர்ப்பது பற்றியும், ஒன்றுபட்ட கட்சியை கட்டுவது பற்றியும், வர்க்கப் போராட்டம் பற்றியும் AMK-யின் கண்ணோட்டத்தை அறிந்து கொள்வதற்கு, அவர் ம-யு-(போ), சென்னை மாவட்டக் கமிட்டிக்கு விடுத்துள்ள ஒரு சவாலுக்கு பதில் அளிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

கட்சி கிளைகளுக்கு உறுப்பினர்களுக்கான சுற்றறிக்கை (14-12-94) பக்கம் 6.இல் ம-யு. (போ) மாநில கூட்டுக் கமிட்டியினர் சென்னை மாவட்டக் கமிட்டிக்கு ஒரு சவால் விடுத்துள்ளனர். அது பின்வருமாறு: ''கரு நிலை வர்க்கப்போராட்டம் என்றால் என்ன? பொருளாதாரப் போராட்டம் தொழிற் சங்கப் போராட்டம் என்று பொருள். தொழிற் சங்க, விவசாய சங்கங்களில் பொருளாதார போராட்டத்தில் தொடங்கி அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்திற்கு வளர்த்து விட முடியும் என கூறுகிறார்கள். இதுதான் சுத்தப் பொருளாதார வாதம். ''நமது போர்த்தந்திர வழி'' மீதான விமர்



படிப்பகம்

www.padippakam.com

சனம் என்பது அனுபவத் தொகுப்பு II பகுதியில் இருக்கிறது. அதில் இந்தப் பொருளாதார வாதக் கோட்பாட்டை விமர்சனம் செய்துள்ளோம். தோழர்கள் அதை மீண்டும் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். சென்னை மாவட்டக் கமிட்டிக்கு கொஞ்சமாவது நேர்மையிருந்தால் அதை விமர்சனம் செய்ய வேண்டும். உட்கட்சி பத்திரிகை இல்லை, ஆகையால் அதை நாங்கள் விமர்சனம் செய்ய மாட்டோம் என்று அவர்கள் சொல்லக்கூடும். அவ்வாறு சொல்வது நேர்மையற்றது, மோசடித்தனமானது. தோழர்களே சிந்திந்து முடிவுக்கு வாருங்கள். பித்தலாட்டக்காரர்களின் மோசடிக்கு இரையாகாதீர்கள், என மாநிலக்கமிட்டி சென்னை நகரத் தோழர்களுக்கு மிகுந்த தோழமையுடன், மாவட்டக் கமிட்டியின் திட்டத்தால் வரப்போகும் விளைவை சுட்டிக் காட்டுகின்றது.''

விவாதத்திற்கு வசதியாக முழு பாராவையும் எடுத்துக் காட்ட வேண்டியுள்ளது. நாங்கள் (முன்னர் ம-யு-(போ) சென்னை மாவட்டக்கமிட்டி) பொருளாதார வாதத்தை முன் வைப்பதாகவும், AMK பொருளாதாரவாத கோட்பாட்டை முறியடித்து விட்டதாகவும் கூறிக் கொள்கின்றனர். இவர்களின் அறிக்கையை விமர்சிக்காமல் இருந்தால் அது நேர்மையற்றது, மோசடித் தனமானது. அத்தகைய நபர்கள் பித்தலாட்டக்காரர்கள் என்றும் கூறுகிறார்கள். 'நமது போர்த் தந்திர வழி' மீது விமர்சனம் வைத்திருப்பவர் AMK தான். தன்னை மாபெரும் தத்துவத் தலைவராக நினைத்துக் கொண்டிருப்பவர். நேரடியாக அவருடன் தான் விவாதிக்க வேண்டியுள்ளது. 'நமது போர்த்தந்திர வழி' (ந. போ. வழி) என்ற அறிக்கை மீது AMK வைத்திருக்கும் விமர்சனமானது தத்துவப் பெட்டகம் போலவும் நாம் அந்த தத்துவப் பெட்டகத்தை நெருங்கியதும் மூச்சடைத்து விழுந்து விடுவோம் என கருதிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

கொஞ்சமாவது நேர்மையிருந்தால் விமர்சிக்கட்டும் என கூறுகிறார்கள். நமது நேர்மையை புரட்சிகர அணிகள் அறிவார்கள். ஆனால் AMK-யின் நேர்மையை யார் அறிவார்? ந. போ. வழி மீதான விமர்சனத்தை மையக்குழுவில் வைத்து விவாதிக்காத நேர்மையாளர். கட்சி உடைந்த பிறகு தமிழ் நாட்டு அணிகளிடையேயும் விவாதத்திற்கு முன் வைக்காதவர். ந. போ. வழி என்ற அறிக்கையை உருவாக்கிய போதே தமிழ்நாட்டு கட்சி அணிகளிடையே விவாதத்திற்கு முன் வைத்து ஜனநாயக ரீதியில் தீர்வு காணாதவர். 1988 சிறப்புக் கூட்டம் எடுத்த முடிவுகளையும் உட்கட்சி பத்திரிகையையும் அமுல்படுத்தாதவர். அணிகளின் விமர்சனத்துக்குப் பதில் அளிக்காத நேர்மையாளர். நேர்மையற்ற அரசியல் வாழ்வை யார் கொண்டுள்ளார்கள்? விவாதத்திற்கு என வைத்திருந்தாலே நமது அறிவுக்கு எட்டிய வரையில் விவாதித்து இருப்போம்.

## உட்கட்சிப் பத்திரிகை தேவை எனக் கூறுவது மோசடித்தனமாகுமா?

'உட்கட்சிப் பத்திரிகை இல்லை, ஆகவே விமர்சிக்க மாட்டோம் எனக் கூறினால் அது மோசடித்தனமானது' என்று AMK கூறுகிறார். கம்யூனிஸ்ட் கட்சிக்கு உட்கட்சிப் பத்திரிகை, தத்துவார்த்த பத்திரிகை வேண்டும் எனக் கூறுவது மோசடித்தனமானதா? தத்துவார்த்தப் பத்திரிகை வேண்டும் என 1988 இல் கூடிய சிறப்புக் கூட்டம் தீர்மானம் போட்டதே அது மோசடித்தனமானதா? சிறப்புக் கூட்ட பிரதிநிதிகள் அனைவரும் மோசடிக் காரர்கள் தானா? சிறப்புக் கூட்ட முடிவான போல்சுவிக் பத்திரிகை நடத்தாமல் இருப்பதுதான் மோசடித்தனமானது. உட்கட்சிப் பத்திரிகை கொண்டு வர முயற்சிகளை மேற்கொண்ட செந்தாமரை தோழரை விரட்டியடித்தது தான் மோசடித்தனமானது. உட்கட்சிப் பத்திரிகை எனப்படுவது உட்கட்சி ஜனநாயகத்திற்கும், கருத்துப் போராட்டத்துக்கும், கட்சிக்கு தத்துவத் தலைமையை உருவாக்குவதற்கும் சிறந்த சாதனம் என்பது உலக மார்க்சிய— லெனினியர்களால் அங்கீகரிக்கப்பட்ட உண்மையாகும். தத்துவ ஓட்டாண்டியாக இருக்கும் AMK விற்கு உட்கட்சி பத்திரிகை தேவை எனக் கூறுவது



படிப்பகம்

www.padippakam.com

மோசடித்தனமானதாகத் தெரிவதில் வியப்பில்லை.

14-12-94 இல் AMK நமக்கு சவால் விடுத்திருந்தாலும், கருத்துப் போராட்டத்துக்கு காலதாமதம் தடங்கல்களாக இருக்காது. ஏனெனில் இன்னமும் அவர் தனது பழைய கருத்திலேயே ஊன்றி நிற்கிறார். நாம் மூச்சடைத்து விழுந்துவிடாமல் இருக்கும் பொருட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனமாக செய்து அந்த தத்துவப் பெட்டகத்தை (ந. போ. வழி மீது விமர்சனம்) இப்போது திறந்து பார்ப்போம்.

'நமது போர்த் தந்திர வழி' என்ற அறிக்கையின் மீது 1986 இல் AMK விமர்சனம் வைக்கிறார். 1980 இல் மக்கள் யுத்தக் கட்சி 10 ஆண்டு அனுபவத் தொகுப்பு, நமது போர்த் தந்திர வழி ஆகிய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டது. AMK மற்றும் அவரது ஆருயிர்த் தோழர் மாணிக்கமும் K.S தலைமையில் அமைந்த மையக்குழுவில் உறுப்பினர்கள். ந. போ. வழியை உருவாக்கியதில் அவர்களுக்கும் பங்கு உண்டு. கருத்தொற்றுமை அடிப்படையில் இணைகின்றனர். மாற்றுக் கருத்து எதுவும் அப்போது அவர்களுக்கு உண்டாகவில்லை. 'ந. போ. வழி' பற்றி AMK வைக்கும் விமர்சனமானது, பொருளாதாரவாத வகைப்பட்டது. தன்னியல்பு வகைப்பட்டது. அதாவது இருவகை தன்னியல்புகளை (பகுதி நலனுக்கான போராட்டத்துடன் ஆயுதப் போராட்டம் இணைத்து நடத்தல்) இணைத்தல் ஆகும். பொருளாதாரவாத அறிக்கையை உருவாக்கி நடைமுறைப்படுத்த தலைமை கொடுத்தவர்கள் AMK வும் மாணிக்கமும் தான். தமிழ் நாட்டு கட்சி அணிகளுக்கு பொருளாதாரவாதத்தையும், தன்னியல்பையும் கற்றுக் கொடுத்து வர்க்கப் போராட்டத்தின் முன்னேற்றத்தை தடுத்தவர்களும் அவர்களே. பொருளாதார வாதம் எனப்படுவது முதலாளித்துவ அரசியல் போக்காகும்.

### பொருளாதார வழியை உருவாக்கியதில் AMK ன்– பாத்திரம் என்ன?

ந. போ. வழி மீது AMK விமர்சனம் வைக்கும் பாங்கே அலாதியானது. மையக்குழு தான் அந்த வழியை முன் வைத்தது. K.S தலைமை தாங்குகிறார். அந்த வழி அவருக்கு ஏற்புடையதாக இருந்ததால் மத்தியக் கமிட்டியோடு இணைகிறார். ஆனால் 6 ஆண்டு காலம் கழிந்த பிறகு அதன் மீது விமர்சனம் வைக்கும் போது, தனது சிந்தனை முறையை விமர்சனம் செய்து கொள்பவர் போல அமையவில்லை. இது கட்சியின் வழி, மத்திய கமிட்டியின் வழி என்று சொல்லி ஒட்டுமொத்தமாக அனைவரையும் பொறுப்பாக்கி விடுவது அவர் இயல்பு. மத்திய கமிட்டியில் அங்கம் வகித்தாலும் நடந்த தவறுகளுக்கு பொறுப்பேற்று பதில் சொல்லும் கடமைப் பொறுப்பு இல்லாதவர். உடல் அழிந்தாலும் ஆன்மா அழியாதது என்று கூறும் ஆன்மீக வாதிகளைப் போல, மையக்குழு தவறு செய்தாலும் தான் எல்லாவிதத் தவறுகளுக்கும் அப்பாற்பட்டவர் போல காட்டிக் கொள்கிறார். சரியான நேரத்தில் தவறுகளை கண்டு பிடித்து மாற்றியமைக்க முயற்சி செய்பவர் போல நடிப்பது அவரது குணம். இந்த வழியை வைத்தது K.S தான். தனக்கு சம்மந்தம் இல்லை என கூறக் கூடும்.

தமிழகத்தில் 73, 74 ஆம் ஆண்டுகளில் தமிழரசன் தலைமையில் கூட்டுக்குழு என்ற போராட்ட வடிவம் உருவாக்கப்பட்டது. கூட்டப் போராட்டம் (வெகுஜனப் போராட்டம்), குழு நடவடிக்கை (அழித்தொழிப்பு) ஆகும். இம்முறை சில இடங்களில் நடைமுறைபடுத்தப்பட்டு பின்னர் தேக்க நிலையை அடைந்தது. AMK ன் கருத்துப்படி இது இருவகை தன்னியல்புகளை ஒன்றிணைத்தல் ஆகும். இவ்வாறு தேக்கமடைந்து விட்ட ஒரு வழியை புத்துயிர் ஊட்டி ம. யு. கட்சி மத்திய கமிட்டியின் வழிமுறையாக உயர்த்திய பெருமை AMK வையே சாரும். தோற்றுப்போன அல்லது மேற்கொண்டு முன்னேற முடியாது என்று ஆகிவிட்ட போது, இன்னும் சில ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்திப் பார்க்க வேண்டும் என்ற ஆசை ஏன் வந்தது? பொருளாதார வாதத்தின் தந்தையே AMK தான்.

தனிநபர் அழித்தொழிப்பு என்கிற பயங்கரவாத வழி முறையை 70- களில் எதிர்த்த



படிப்பகம்

www.padippakam.com

தாக கூறிக் கொள்கிறார். 80- ஆம் ஆண்டில் ம. யு. கட்சி அமைத்த போது, 'ந. போ. வழி' கூறுகிறது. ''ஆயுதப் போராட்டம் ஒரு பின்னடைவை அடைந்திருப்பதற்குப்பின் நடத்தப்படுகின்ற பகுதி பிரச்சனைகளுக்கான போராட்டங்களின் போது குரூரமான நிலப்பிரபுக்களை மக்கள் விரும்பினால் அழித்தொழிக்கலாமா? அப்படிப்பட்ட அழித்தொழிப்பு நடத்தப்பட்டால் அது ஆயுதப் போராட்டம் என்று கூறப்படுமா? இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒன்றுதான். ஆம், முடியும். என்பதுதான்.'' அழித்தொழிப்பையும் ஒரு போராட்ட வடிவமாக முன் வைத்தது மல்லாமல், அதையே ஆயுதப் போராட்டம் என்கிற தகுதியைப் பெறும் என ஒத்துக் கொள்கிற அளவுக்குதான் AMK.ன் தத்துவப் புரிதல் இருந்தது.

'நமது போர்த் தந்திர வழியை' விமர்சிக்கத் தொடங்கிய AMK லெனினுடைய என்ன செய்ய வேண்டும் என்ற கட்டுரையை துணைக்கு நாடியிருக்கிறார் அக்கட்டுரையில் இருந்து விரிவான மேற்கோள்களை எடுத்துக் காட்டி ந. போ. வழியானது பொருளாதார வாதமாகவும் இருவகை தன்னியல்புகளை ஒன்றிணைத்தும் உள்ளது என்ற முடிவுக்கு வந்துள்ளார். ந. போ. வழியின் அடிப்படையில் ம. யு. கட்சியை கட்டுவதற்கு முன்னரே என்ன செய்ய வேண்டும் என்ற கட்டுரையை படிக்கவில்லை போலும். அப்படிப் படித்திருந்தால் புரட்சிகர அணிகளை புதை சேற்றில் தள்ளி தானும் விழுந்து மாட்டிக் கொள்ளாமல் இருந்திருப்பாரோ! அப்படி இருந்திருக்காது என்பது அவரின் வரலாறு காட்டுகிறது.

### கட்சியைக் கட்டுவது செயல் தந்திரம் கொண்டு அல்ல :

1980 இல் ம.யு. கட்சியை உருவாக்குவதற்கு அடிப்படையாக பத்து ஆண்டு அனுபவத் தொகுப்பு, ந. போ. வழி என்ற இரண்டு அறிக்கைகள் மட்டுமே வைக்கப்படுகின்றது. வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ம. யு. கட்சி கட்டப் படவில்லை. 70 ஆம் ஆண்டு திட்டத்தை இவர்கள் ஏற்றுக் கொண்டிருப் பார்களேயானால் அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்த பல குழுக்களையும் ஒன்று படுத்தியிருக்க வேண்டும். ஆனால் வெறும் போ. த. வழியை கட்சி கட்டுவதற்கான அடிப்படையாக பார்த்துள்ளனர். இது மா. லெ. வழியில் கட்சி கட்டும் முறைக்கு எதிரானதாகும். 1969 இல் மா. லெ. கட்சி கட்டுவதற்கு அழித்தொழிப்பு போர்த் தந்திரம் அடிப்படையாக கொள்ளப்பட்டது. 1980 இல் ம. யு. கட்சி கட்டுவதற்கு போர்க்குணமிக்க பொருளாதார வாதம் அடிப்படையாக கொள்ளப்பட்டது. போராட்ட வடிவங்களில் ஒத்த போக்குள்ளவர்களை மட்டுமே கொண்டு கட்சியைக் கட்டுவது என்பது மா. லெ. குழுக்களுக்கிடையே நிலவுகின்ற போக்காகும். அதனாலேயே பல குழுக்களாக நீடித்துக் கொண்டிருக்கின்றன.

கட்சி எனப்படுவது, பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்த, அரசியல், இராணுவத் தலைவன் என தோழர் ஸ்டாலின் கூறுகிறார். K. S மட்டும் அல்ல, A.M K. வும் இதைப் புறக்கணித்துள்ளனர். பல்வேறு குழுக்கள் நிலவுகின்ற சூழலில் ஒரே புரட்சிகர கட்சியைக் கட்டுவதுபற்றி லெனினின் கருத்துகள்.

''ருசிய சமூக ஜனநாயக வாதிகளாகிய நாம் ஒன்றுசேர்ந்து புரட்சிகர சமூக ஜனநாயகக் கொடியின் கீழ் போராடுவதற்காக நமது உழைப்பு அனைத்தையும ஒரு வலுவான கட்சியை கட்டுவதற்காக திருப்பி விடவேண்டும்.''

''கட்சியை திடப்படுத்தி நிறுவுவது என்பது ருசிய சமூக ஜனநாயக வாதிகளை ஒழுங்கு படுத்தி திடப்படுத்துவது ஆகும்.''

''அதிருப்தியையும், குழப்பத்தையும் களைவதற்கு முதலாவதாக உறுதியான சித்தாந்த ஒற்றுமையை சாதிப்பதற்காக வேலை செய்வது அவசியமாகும்.''

இந்த சித்தாந்த ஒற்றுமை ஒரு கட்சித் திட்டத்தின் மூலம் திடப்படுத்த வேண்டும்.

(இஸ்க்ரா ஆசிரியர் குழுவின் பிரகடனம்- என்பதில் இருந்து).



படிப்பகம்

www.padippakam.com

## பொருளாதார வாதத்தையும் தன்னியல்பை வழிபடும் போக்கையும் எதிர்ப்பது எவ்வாறு?

'நமது போர்த் தந்திர வழி' பற்றி AMK வைத்துள்ள விமர்சனம் சரியானது தான். அதாவது பொருளாதார வாதம் தன்னியல்பு என முடிவுக்கு வந்துள்ளார். பொருளாதார வாதத்திலிருந்து தனது குழுவை மீட்பதற்கு அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? அரசியல் நடத்தை வழியை உருவாக்கி (அரசியல் செ.த.) கட்சியை போல்ஸ்விக்காக மாற்றுவது என கூறுகிறார் (சி. கூ. அறிக்கை) தமிழ் நாட்டில் ஒரு சிறு குழுவையே போல்சுவிய மயமாக்கி விட முடியும் எனக் கூறும் போது, போல்சுவிய மயமாதல் என்பதன் பொருளையே அவர் புரிந்து கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

பொருளாதார வாதத்தில் இருந்து முறித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக பொருளாதாரப் போராட்டங்கள் மீது விரோதமான மனப் போக்கையே கொண்டுள்ளார். AMK கூறுகிறார். ''கருநிலை வர்க்கப் போராட்டம் என்றால் பொருளாதாரப் போராட்டம், தொழிற் சங்கப் போராட்டம் என்று பொருள். தொழிற் சங்க விவசாய சங்கங்களில் பொருளாதாரப் போராட்டத்தில் தொடங்கி அரசியல் அதிகாரத்துக்கான போராட்டத்திற்கு வளர்த்து விட முடியும் என்று கூறுகிறார்கள்'' என்று நம் மீது குற்றம் சாட்டுகிறார்கள். அமைப்பு ரீதியாக திரட்டப் படாத விவசாயிகளையும், தொழிலாளர்களையும் வர்க்க அமைப்புகளில் திரட்டுவது தவறு அல்ல. விவசாய சங்கமும் தொழிற் சங்கமும் வர்க்க அமைப்புகள்தான். வர்க்கப் போராட்டத்தை நடத்துவதற்கு எதிரான அமைப்புகள் அல்ல. வர்க்கங்களுக்கு அப்பால் நின்று கொண்டு புரட்சி பேசுபவர் கற்பனாவாத புரட்சியாளராக இருப்பார். பொருளாதாரப் போராட்டங்கள், வாழ்நிலையை உயர்த்திக் கொள்வதற்காக பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்து நடத்துவது. அரசியல் போராட்டம் அரசியல் ஜனநாயக கோரிக்கை வைத்து நடத்துவது.

பொருளாதாரப் போராட்டமே அரசியல் அதிகாரத்துக்குக் கொண்டு சென்று விடும் என்று கூறுபவர்கள் முட்டாளாகத்தான் இருந்து தீரவேண்டும். ஆனால் பொருளாதாரப்போராட்டம் அரசியல் போராட்டத்திற்குத் தடங்கல் உண்டாக்கும் என AMK கூறும் போது மார்க்சிய நிலைப்பாட்டில் இருந்து விலகி விடுகிறார்.

வர்க்கப் போராட்டம் குறித்து AMK ன் கருத்து மார்க்சிய- லெனினிய நிலைக்குப் பொருந்துவதாக இல்லை. ''உடனடி பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகத் தொழிலாளர்களிடையே கிளர்ச்சி நடத்துகிற போது. இத்துடன் உடனடி அரசியல் — கோரிக்கைகளுக்கான கிளர்ச்சியையும் சமூக ஜனநாயக வாதிகள் பிரிக்க முடியாத படி ஒன்றிணைக்க வேண்டும். இந்த இரண்டு வகை போராட்டங்களும் ஒன்றையொன்று பிரிக்க முடியாத ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்ற சமூக ஜனநாயக வாதத்தின் நடவடிக்கைகளாகும். பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வை வளர்ப்பதற்கு பொருளாதார மற்றும் அரசியல் போராட்டங்கள் இரண்டும் சம முக்கியத்துவம் உடையதாகும். ருசியத் தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தை வழி நடத்துவதற்கு பொருளாதார மற்றும் அரசியல் போராட்டம் இரண்டுமே சம முக்கியத்துவம் உடையதாகும். ஏன் என்றால் ஒவ்வொரு வர்க்கப் போராட்டமும் ஒரு அரசியல் போராட்டமாகும். (ருசிய சமூக ஜனநாயக வாதிகளின் கடமைகள். லெனின் தொகுப்பு நூல்—2)

''மார்க்சியம் தொழிலாளி வர்க்கத்தினுடைய பொருளாதார மற்றும் அரசியல் போராட்டத்தை ஒன்றோடொன்று பிரிக்க முடியாத முழுமையாக இணைக்கிறது.'' ''அரசியல் மற்றும் பொருளாதாரப் போராட்டத்தை சர்வதேச சமூக ஜனநாயக வாதம் பிரிக்கமுடியாத அம்சமாக அதாவது இரத்தமும் சதையும் போல வர்க்கப் போராட்டத்துடன் கண்டிப்பாக இணைக்க வேண்டும்''

(சமூக ஜன நாயக வாதிகளின் எதிர்ப்பு பற்றி லெனின் தொகுப்பு நூல்—4)



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கப் போராட்டம் மற்றும் பொருளாதாரப் போராட்டம் குறித்து AMK தவறான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்கிறார். மேலும் பொருளாதார வாதத்தில் இருந்து இயக்கத்தை மீட்பதற்கு செயல் தந்திரத்தை அரசியல் வகைப்பட்டதாக மாற்றினாலே போதும் என்கிறார். வர்க்கப் போராட்டத்தை ஒழுங்கமைத்தல் திட்டத்தின் பணியாகும் என்கிறார் லெனின். ''பாட்டாளி வர்க்கத்தினுடைய வர்க்கப் போராட்டத்துக்கு நிறுவன ஒழுங்கமைப்பு செய்வதும், பாட்டாளிவர்க்கம் அரசியல் அதிகாரம் வெல்வதையும் சோசலிச சமுதாயம் ஒழுங்கமைக்கப் படுவதையும் இறுதிக் குறிக்கோளாகக் கொண்ட இந்த வர்க்கப் போராட்டத்துக்கு தலைமை தாங்குவதுமே வேலைத் திட்டத்தின் சாரப் பொருள்.''

(லெனின், நமது வேலைத்திட்டம், தொ. நூ—4).

'நமது போர்த் தந்திர வழி' பொருளாதார வாதத்தில் உள்ளது என நிரூபிக்க AMK லெனினுடைய 'என்ன செய்ய வேண்டும்' என்ற கட்டுரையை துணைக்கு நாடியிருக்கிறார். என்ன செய்ய வேண்டும் என்ற கட்டுரை 1902 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. ருசிய சமூக ஜனநாயக கட்சிக்கு ஒரு வேலைத் திட்டத்தை தயாரித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் எழுதப்பட்டது. அச்சமயத்தில் ருசியத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் பொருளாதார வாதம் ஒரு தத்துவப்போக்கு என்கிற விதத்தில் நிலவியது. தொழிலாளி வர்க்கம் பொருளாதாரப் போராட்டங்களை மட்டுமே நடத்தி வரவேண்டும்—அரசியலை முதலாளி வர்க்கம் கவனித்துக் கொள்ளும் என்றும், பொருளாதாரப் போராட்டம் ஒரு கட்டம் வரை நடத்த வேண்டும் அடுத்த கட்டத்தில் அரசியல் போராட்டம் நடத்த வேண்டும் என்றும் அத்தத்துவப் போக்கு கூறியது. பயங்கர வாதப் போக்கும் உடன் நிலவியிருந்தது. இப்போக்கு தொழிலாளி வர்க்கத்துக்கு மையப்படுத்தப்பட்ட தலைமையின் கீழ் ஒன்றுபட்ட ஒரே கட்சியை மறுத்தது. எண்ணற்ற குழுக்கள் நீடித்திருக்கவே வகை செய்தது. இதனால் எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்துப் போராடும் தொழிலாளி வர்க்கத்தை நிராயுதபாணியான நிலைமைக்குள் தள்ளியது. தொழிலாளி வர்க்க இயக்கம் சிறியதாகவும், துண்டு துணுக்குகளாகவும் அரசியல் முக்கியத்துவம் பெறாமலே இருந்தது. ஒவ்வொரு குழுவும் எதேச்சாதிகார ஆட்சியை எதிர்த்துப் போரிட முடியாதென்ற முடிவுக்கு லெனின் வந்தார். துண்டு துண்டான, பகுதியளவிலான நடவடிக்கைகளை ஒரே சமூக ஜனநாயகவாத (மார்க்சிய— லெனினிய) இயக்கத்தின் நடவடிக்கையாக மாற்றுவதற்கு ஒரு வேலைத்திட்டம் அவசியமாகும் என்பதை வலியுறுத்தினார்.

''வேலைத் திட்டமானது நமது அடிப்படைக் கருத்துக்களை உருவாக்கவேண்டும். நமது உடனடி அரசியல் கடமைகளை துல்லியமாக நிறுவ வேண்டும். கிளர்ச்சிப் பணிகளின் களத்தை எடுத்துக்காட்டும் உடனடி கோரிக்கைகளை சுட்டிக்காட்ட வேண்டும். கிளர்ச்சிப் பணிகளை ஒருமித்து விரிவாக்கி ஆழப்படுத்த வேண்டும். இவ்வாறாக, கிளர்ச்சிப் பணியை சின்னஞ்சிறிய துண்டு துக்காணி கோரிக்கைகளுக்கான தனித்தனி பகுதி போராட்டங்கள் என்ற நிலையிலிருந்து சமூக ஜனநாயக கோரிக்கைகள் முழுமைக்குமான போராட்டம் என்ற நிலைக்கு உயர்த்த வேண்டும்.''

(லெனின் தொ. நூல்—4 ; நமது கட்சியின் நகல் திட்டம்).

மேற்கண்ட முறையில் அமைந்த வேலைத் திட்டத்தை உருவாக்கி அவற்றை புரட்சிகரக் குழுக்களிடையேயான கருத்துப் போராட்டத்திற்கு அடைப்படையாகக் கொள்ள வேண்டும். வேலைத் திட்டத்தின் அடிப்படையில் கருத்தொற்றுமையையும் அதன்மூலம் ஒன்றுபட்டபுரட்சிகரகட்சியையும் லெனின் சாதித்தார். பொருளாதார வாதத்திலிருந்தும், பயங்கர வாதத்தில் இருந்தும் பாட்டாளி வர்க்க இயக்கத்தை காப்பாற்றும் லெனினிய வழி முறை இதுவேயாகும். 1903 இல் ஒரு வேலைத் திட்ட அடிப்படையில் ஒரு அகில ருசியக் கட்சி உருவாகிறது. 1905 இல் ஜாரை எதிர்த்து தொழிலாளர்களின் எழுச்சியும் கட்டியமைக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

1980 இல் AMK மக்கள் யுத்தக் கட்சியை உருவாக்கிய போதே இந்தியாவில் பல்வேறு புரட்சிகரக் குழுக்கள் இருந்தன. அக்குழுக்களுக்கிடையே சித்தாந்தப் போராட்டம் நடத்தி சித்தாந்த ஒற்றுமையின் அடிப்படையில் அகில இந்திய புரட்சிகர கட்சியை கட்டுவதற்கு முயற்சி செய்ய வில்லை. போராட்ட வடிவத்தில் மட்டும் ஒற்றுமையைக் கொண்டிருந்த இரண்டு குழுக்கள் ஒன்றிணைந்தன. 1986 இல் தேக்க நிலை அடைந்துவிட்ட இயக்கத்தைப் பரிசீலனை செய்யும் போது 'போர்த்தந்திர வழியின்' மீது விமர்சனம் வைக்கிறார். அந்தச் சூழலிலும் கூட இந்தியாவில் பல குழுக்கள் நீடித்துக் கொண்டிருக்கின்றன. பாட்டாளி வர்க்க இயக்கத்தை முழு அளவில் பரிசீலனை செய்து மாற்றியமைப்பதற்குப் பதில், அரசியல் வகைப்பட்ட போர்த்தந்திரத்தை வைத்து தனது குழுவை மட்டும் அதுவும் தமிழ்நாடு அளவில் சுருங்கிவிட்ட ம.யு. (போல்சுவிக்) குழுவை போல்சுவியமயமாக்குவது பற்றி பேசுகிறார். பிறகுதான் தாமதமாக திட்டம் பற்றிய பிரச்சனையை பரிசீலிக்கிறார். 70 ஆம் ஆண்டு திட்டம் அடிப்படையில் சரியாக உள்ளது எனக் கூறி திட்டத்தின் மீது விவாதங்களை மறுக்கின்றார். 1970 ஆம் ஆண்டு திட்டம் அடிப்படையில் சரியாக உள்ளதென்றால், அன்று முதல் இன்று வரை பயங்கர வாதத்திலும் பொருளாதார வாதத்திலும் இயக்கம் உள்ளதென்றால் கட்சித் திட்டம் வர்க்கப் போராட்டத்திற்கு வழி காட்ட வில்லை என்று தான் பொருள். 70 திட்டம் மிகவும் சரியாக உள்ளது, அடிப்படையில் சரியாக உள்ளது எனக் கூறி ஊறுகாய்ப் பானையில் போட்டு வைப்பது அல்ல. மக்களின் நடைமுறை வர்க்கப் போராட்டத்திற்கு தலைமை அளிக்க வேண்டும்.

70 ஆம் ஆண்டு திட்டம் அடிப்படையில் சரியாக உள்ளதென்றால் இந்தியப்பாட்டாளி வர்க்க இயக்கத்தில் உள்ள பயங்கரவாதத்தையும், பொருளாதார வாதப் போக்கையும் முறியடித்து பாட்டாளி வர்க்க இயக்கத்தை சரியான திசையில் நகர்த்தி இருக்கவேண்டும். ஆனால் மா.லெ இயக்கம் பல்வேறு குழுக்களாக சிதறுண்டும், துண்டு துண்டான, பகுதியளவிலான நடைமுறையிலும் உள்ளது. இது மா.லெ இயக்கத்தின் ஒரு பின்னோக்கிய போக்கையே பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு குழுவும் ஏகாதிபத்தியம் ஒழிக, நிலப்பிரபுத்துவம் ஒழிக, பாசிச ஆட்சி ஒழிக எனக் கூறுகிறது. எந்த ஒரு குழுவாவது தனியாக இவற்றை சாதித்துவிட முடியுமா? ஒவ்வொரு குழுவும் தனக்கென ஒரு திட்டத்தையும், போர்த் தந்திரத்தையும் உருவாக்கி தனது குழுவை மட்டும் சீரமைத்துக் கொள்வதால் இந்தியப் புரட்சி இயக்கத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கி விட முடியாது. பகுதி அளவிலானதும் துண்டு துண்டானதுமான நடவடிக்கைகளை ஒழித்து இந்தியாவுக்கான புரட்சிகரத் தத்துவத்தின் (வேலைத்திட்டம்) அடிப்படையில் தேசிய அளவிலானதும் வெகுஜன இயல்புள்ளதும் சித்தாந்த ரீதியிலும், அரசியல் ரீதியிலும், அமைப்பு ரீதியிலும் முற்றாக திடப்படுத்தப்பட்டதுமான போல்சுவியமான கட்சியைக் கட்ட வேண்டும். இந்நோக்கத்திற்காகப் புரட்சிகர குழுக்களிடையே சித்தாந்த ஒற்றுமை அடைய வேண்டும். இந்த சித்தாந்த ஒற்றுமை ஒரு கட்சி திட்டத்தின் மூலம் திடப்படுத்தப்பட வேண்டும். AMK அரசியல் செயல் தந்திரத்தை உருவாக்கி தனது குழுவை மட்டும் சீரமைக்க விரும்பினார். அதுவும் நடைபெறவில்லை. மா.லெ இயக்கத்தில் நிலவும் நோயை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. நோய் ஒன்றாக இருக்க வைத்தியம் வேறு ஒன்றாக செய்கிறார். ஒரு குழுவின் தலைவராக செயல்பட விரும்புகிறாரே தவிர ஒட்டு மொத்த பாட்டாளி வர்க்க இயக்கத்தின் பிரதிநிதியாக செயல்பட வில்லை.

லெனின் பொருளாதார வாதத்தை முறியடிப்பதற்கு விஞ்ஞானபூர்வ திட்டதை முன்வைக்கிறார். AMK அரசியல் வகைப்பட்ட செயல் தந்திரத்தை முன்வைக்கிறார். லெனின் புரட்சிகர குழுக்களுக்கிடையே சித்தாந்தப் போராட்டம் நடத்தி பலம் வாய்ந்த கட்சியை உருவாக்க வேண்டும் என்கிறார். AMK தமிழ் நாட்டில் தன் தலைமையில் உள்ள ஒரு சிறிய குழுவையே போல்சுவிக்காக மாற்றுவது பற்றி பேசுகிறார். முன்னவர் பொருளாதார, அரசியல் போராட்டங்களை வர்க்கப் போராட்டத்தின் அங்கமாக, இரத்தமும் சதையும் போல கருதுகின்றார். பின்னவர் பொருளாதாரப் போராட்டங்கள் பால் பகைமையான மனப்பான்மையை காட்டுகிறார். முன்னவர் வர்க்கங்களை திரட்டி வர்க்கப் போராட்டம் நடத்த வேண்டும் என்கிறார். பின்னவர் வர்க்கங்களுக்கு அப்பால் இருந்து கொண்டு அரசியல் முன்னணி எனக் கூறி சில குட்டி முதலாளித்துவ பிரிவினரைக் கொண்டு வர்க்கப் போராட்டம் பற்றி பேசுகிறார். லெனின் புரட்சிக்கு வழி காட்டினார். AMK போகாத ஊருக்கு வழிகாட்டுகிறார். □



படிப்பகம்

www.padippakam.com

# தோழர் வினோத் மிஸ்ரா நினைவாக!

எனது வழிகாட்டியாக - ஆசிரியர்களாக ஐந்து பேரை எனது எண்ணத்தில் இருத்தி இருந்தேன். அதில் இருவர் தங்களது போக்கு காரணமாகவே அந்த தகுதியிலிருந்து விலகி விட்டார்கள். இடைவெளியை நிரப்பும் விதமாக இரண்டு புதிய வழிகாட்டிகள் கிடைத்தார்கள். தோழர்கள் வினோத் மிஸ்ராவும், கே.என்.ஆருமே அவர்கள். இருவரையும் ஆசிரியர்களாக கருதிய போதிலும் வேறுபாடுகள் உள்ளதன் காரணமாக விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்களாக கருத முடியவில்லை. விமர்சனத்திற்கு உட்பட்டவர்கள் என்ற முறையில் அவர்களை கடந்து செல்ல வேண்டியதும் ஒரு மாணவரின் சோசலிச கடமையாக இருந்தது. ஆனால் வாழ்க்கை எவ்வளவு கடினமானது என்பது மீண்டும் ஒரு முறை தோழர் வினோத் மிஸ்ராவின் மறைவினால் தன்னை வெளிக்காட்டிக் கொண்டது. தோழர் கேசவனை இழந்த சில தினங்களுக்குள் தோழர் வினோத் மிஸ்ராவின் திடீர் மறைவு அதிர்ச்சியூட்டியது. தோழர் வினோத் மிஸ்ராவை இப்படியா **கடக்க** வேண்டும்...?

மேலே கண்ட எனது உணர்வு நிலை தனிநபர் வரலாற்று பாத்திரத்தின் எல்லைக்குட்பட்டது, தனிநபர் வழிபாட்டு பாத்திரத்திற்கு உரியதல்ல என்பதை வாசகர் அங்கீகரிப்பார் என்று நம்புகிறேன்.

தோழர் வி.எம். மறைவு லிபரேசனுக்கு மட்டுமல்ல, இந்திய இடதுசாரி இயக்கத்திற்கே பேரிழப்பாகும். குறுங்குழுவாத அமைப்பாக இருந்த லிபரேசனை ஒரு வெகுஜன அடித்தளம் உள்ள அரசியல் அமைப்பாக அதிலும் இந்தி பிராந்தியத்தில் உருவாக்கியது அவரது மிகப்பெரும் பங்களிப்பாகும். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவரிடம் ஒரு மணி நேரம் உரையாற்றிக் கொண்டிருக்கையில் அவர் கட்சி கட்டிய முறையைக் குறித்து நான் மனம் விட்டு பாராட்டினேன். அவரும் எனது நிலைபாட்டை அவர்களது மைய வகுப்பு ஒன்றை துவக்கி வைக்கும்போது மேற்கோளாக குறிப்பிட்டார். ஒரு மணி நேர உரையாடலில் நான் பேசிக் கொண்டிருக்கையில் ஒரு முறைகூட அவர் குறுக்கிடவே இல்லை. முழுவதும் கவனித்து கேட்டார். இந்த பண்பு நமக்கில்லையே என்று அடிக்கடி நான் வருந்தியதுண்டு. அந்த உரையாடலின் போது லிபரேசனின் ஐந்தாவது காங்கிரசின் 3வது மற்றும் 4வது கருத்தியல் தீர்மானத்தின் அயன்மைத் தன்மையை நான் விமர்சித்தேன். ஒரு புறம் சோசலிச நாடுகளில் முதலாளிய மீட்சி ஏற்படும் என்று ஒப்புக் கொள்வதும் மறுபுறம் கோர்பச்சேவ் மற்றும் டெங் வகைப்பட்ட சோசலிசம் என்பதுமே அந்த அயன்மை தன்மை என்று நான் கூறினேன். ஆனால் அவரோ ஏகாதிபத்தியம் சோசலிசம் தகர்ந்ததை கண்டு மகிழலாம்; நாம் மகிழ இயலுமா என்ற உணர்ச்சிமயமான பதிலால் என்னை எதிர் கொண்டார்.

அவர் கூட்டங்களில் சுருக்கமாகத்தான் பேசினார். ஆனால் அது நயம்பட இருந்தது. எழுத்தோவியங்கள் கூட அழகுபட தீட்டப்பட்டிருந்தன. அவரது ''இந்தியா என் கனவுகளில்'' என்ற கட்டுரை எத்தகைய இலக்கிய நயம் வாய்ந்ததாக இருந்தது. அதை ஒவ்வொரு பொதுவுடமையாளரும் படிக்க வேண்டும். அவரது கனவை முன்னெடுத்து செல்ல உறுதியேற்க வேண்டும்.

உலகமயம் - தாராளமயம் கொள்கைகள் நாட்டில் ஏகாதிபத்திய கொள்ளையை அதிகரித்துக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில், இந்துத்துவா சக்திகள் பாசிச அச்சுறுத்தலாக வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் தோழர் வினோத் மிஸ்ராவின் மறைவு நிகழ்ந்துள்ளது. மரபு ரீதியான இடதுசாரி கட்சிகள் ஏகாதிபத்திய - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு திட்ட அடிப்படையில் ஒன்றுபட அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள். இத்துடன் பா.ஜ.க.-வுக்கு மாற்றாக காங்கிரசுடன் அவர்கள் சேர முயற்சிக்கிறார்கள். இத்தகைய பின்னணியில் லிபரேசன், செங்கொடி (ரெட்ஃபிளாக்) உட்பட்ட ஆறு புரட்சிகர இடது அமைப்புகள் முழக்க அடிப்படையிலான கூட்டு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன. தோழர் வி.எம். ஆர்வம் காட்டிய இந்த முன்முயற்சியுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு திட்டத்தின் அடிப்படையிலும் ஒன்றுபட நிலைமைகள் கோருகிறது.

இறுதியாக ஒரு வேண்டுகோள். பொதுவாக பொதுவுடைமையருக்கும் குறிப்பாக தோழர் வினோத் மிஸ்ரா போன்ற தலைமை ஊழியருக்கும். ஒவ்வொரு கம்யூனிஸ்டும் முதலில் தன் உடல் நலனில் தானே அக்கறை செலுத்த வேண்டும். சீனப் புரட்சியின் போது மாவோ தனது உடல் நலனைப் பேண நீச்சல் அடித்தார் என்றெல்லாம் அவரது வாழ்க்கையைப் பற்றி படிக்கும்போது தெரிந்து கொள்ளுகிறோம். இங்கு தலைவர்கள் புகையை ஊதித் தள்ளுகிறார்கள். கூட்டங்களில் கூட புகைமயம்தான். பொதுவுடைமையர் தன்னைக் காப்பாற்றும் முயற்சி வேண்டும். இயக்கமானது Save the general staff -ஊழியரை பாதுகாக்கும் கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும். தோழர் வினோத் மிஸ்ராவின் திடீர் மறைவு இந்த இரு படிப்பினைகளையும் கூட நமக்கு வழங்குகிறது.

தோழர் வினோத் மிஸ்ராவை நினைவில் வைப்போம்!

**- எல்ஜியெஸ்**

படிப்பகம்

www.padippakam.com



# ஒரு மொழிக் கொள்கையை உயர்த்திப் பிடிப்போம்! தமிழை பயிற்று மொழியாக்கவும் ஆட்சி மொழியாக்கவும் அணிதிரள்வோம்!

- இல.கோ.

எங்கும் தமிழ்; எதிலும் தமிழ் என்ற முழக்கம் பல பத்தாண்டுகளாக ஒலிக்கிறது. சொல்வது - எளிது; செய்வது - அரியது என்ற குறளை மெய்ப்படுத்துவது போல் இது வரையிலான ஆட்சியாளர்கள் நடந்து கொண்டிருக்கின்றனர். கடந்த சில ஆண்டுகளாகவே பல்வேறு அமைப்புகள் கூட்டாக இணைந்து தமிழை பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஆக்க வேண்டும் என குரல் எழுப்பி வருகின்றனர். செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆட்சியாளர்கள் கேளாச் செவியராக உள்ளனர். நிர்பந்தம் காரணமாக கொண்டுவரும் சீர்திருத்தம்கூட அரைகுறையாய் அமைந்துவிடுகிறது. அந்த அளவுக்கு ஆங்கிலப் பேய் பிடித்து ஆட்சியாளர்களை ஆட்டுவிக்கிறது.

இத்தகையதொரு சூழலில்தான் தமிழ்ச் சான்றோர் பேரவை தனது மாநாட்டின் மூலம் கீழ்வரும் மூன்று முடிவுகளை எடுத்துள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கல்விக் கூடங்களிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும் பாடமொழியாகவும் இருக்க வேண்டும். ஆறாம் வகுப்பு முதல் அனைத்து நிலைகளில் ஆங்கில ஒரு 'மொழிப்பாடமாக' மட்டுமே கற்பிக்கப்படலாம்.
- ''பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட உயர் கல்வித் துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ்வழி பாடநூல்கள் தயாராகவும், அறிமுக நிலையிலும் இருப்பதால் வரும் கல்வியாண்டிலேயே அவ்வுயர் கல்வித் துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும்.
- தமிழக அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ்வழிக் கல்வி பயின்றவர்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டும்.

இக் கோரிக்கைகளை வலியுறுத்தி 100 தமிழறிஞர்கள் சாகும்வரை பட்டினிப் போர் மேற்கொள்ளவும் அந்த மாநாட்டில் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இருபதாண்டுகளுக்கு முன்னர் நாம் 'சமரன்' கொண்டு வரும் காலத்திலேயே - 79ம் ஆண்டு சமரனில் எழுதிய ஒரு கட்டுரையில் இந்தி திணிப்பையும், ஆங்கில ஆதிக்கத்தையும் எதிர்த்திருந்தோம். தாய் மொழி கல்வியின் அவசியத்தை உணர்த்தியிருந்தோம். இதுமட்டுமல்ல, தமிழ்மொழி விடுதலை பெறவேண்டுமாயின் தமிழ் இனம் விடுதலை பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்தோம்.

அண்மையில் மக்கள் விடுதலை முன்னணி என்ற அமைப்பின் கொள்கை அறிக்கையில் கூட எட்டாவது தலைப்பில் தமிழ்மொழி கல்விக்காக போராட வேண்டும் என்றும் ஏழாவது தலைப்பில் தேசிய இனங்களின் பிரிந்துபோகும் உரிமைக்காக போராட வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

ஒரு பொதுவுடைமையர் உலக மாந்தரின் (ஒடுக்கப்பட்டோர்) விடுதலைக்கும் நிற்கிறார். தனது நாட்டின், தேசிய இனத்தின், மொழியின் விடுதலைக்கும் நிற்கிறார். அவருக்கு சர்வதேசியமும் தேசியமும் இரு கண்கள். மார்க்ஸ், லெனின், மாவோ போன்றோர் இரண்டையும் ஒருங்கிணைத்தே எடுத்துச் சென்றுள்ளனர். இந்திய நிலைமைகளில் எவ்வாறு இதை எடுத்துச் செல்வது என்பதை வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக தேசிய இன தன்னுரிமைக்கும், ஒரு மொழிக் கொள்கைக்கும் (தாய் மொழிக் கொள்கைக்கும்) போராடிவரும் பொதுவுடைமையன் என்ற வகையில் தமிழ்ச் சான்றோர் பேரவையின் சாகும்வரை பட்டினிப் போரில் என்னையும் இணைத்துக் கொண்டேன். இதுமட்டுமல்ல, 4 வயதில் உள்ள பேரனும் பேத்தியும் ஆங்கில மழலையர் பள்ளியில் படும் துயரினை அன்றாட வாழ்வில் சந்திக்கும் நான் ஆட்சியாளரை நிர்ப்பந்திக்கவும் மக்களிடம் (என் குடும்பத்தார் உட்பட) விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்த முடிவை மேற்கொள்ள நேர்ந்தது.

இறுதியாக, கலைஞருக்கு ஒரு வார்த்தை, கலைஞரின் தமிழ் ஆர்வமும், பற்றும் உலகு அறியாதது அல்ல. அவரது தமிழின் மேன்மையும் ஆன்றோர் - சான்றோர் அறியாதது அல்ல. அவரது அரசியலுடன் நமக்கு வேறுபாடுகள் உண்டு. இருப்பினும் அவரது தமிழின் மேல் நமக்கு பற்றுண்டு. அப்படிப்பட்டவர் ஆங்கில மோகிகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருப்பதால் அவரது இனத் தோற்றுவாயை (தெலுங்கர்) தோண்டி எடுக்கும் அளவுக்கு தமிழ் அடிப்படைவாதிகள் செல்ல வேண்டியுள்ளது. தமிழ்நாட்டை ஆட்சி செய்தோரில் கணிசமானோர் வரலாறும் அத்தகையதாக உள்ளது. இந்த களங்கத்தை அவர் துடைத்துக் கொள்ளட்டும். குடும்பக் கட்டுப்பாடு விஷயத்தில் மாறனை மறுத்ததுபோல் பயிற்று மொழி விஷயத்தில் மாறன் - அன்பழகன் வகையறாவை மறுத்து ஒதுக்கட்டும். துணிச்சலாக தமிழ் பயிற்று மொழி - ஆட்சி மொழிக்கான ஆணைகளை பிறப்பிக்கட்டும்.

★ *ஆங்கில மோகத்தை அறுத்தெறிக!* ★ *அன்னைத் தமிழை அரியணை ஏற்றுக!*

'POTHUVUDAIMAI' Marxist-Leninist Idiological Bi-Monthly (Tamil)
L. Govindaswamy, C/o Silapathikaram, No.1, First St., Somasundara Bharathi Nagar, Vadapalani, Chennai-600 026.

படிப்பகம்